මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 "ර" ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154 "ன" ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 "R" of the Constitution)

03, සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 03, சரண மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
03, Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No.: FC/PRP/08/01/2021

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2021.09.21

அதி மேதகு கோட்டாபய ராஜபக்ச
இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் சனாதிபதி
சனாதிபதி செயலகம்
கொழும்பு – 01

அதி மேதகு சனாதிபதி,

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் 13வது திருத்தச் சட்டத்தின் 154R (4) உறுப்புரிமைக்கு அமைவாக மாகாண சபைகளின் பயன்பாட்டிற்கென அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடையினை பகிர்ந்தளிப்பது தொடர்பான நியமங்களை பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடப்பாடாகிறது.

2022 ஆம் ஆண்டில் மாகாணசபைகளின் பயன்பாட்டிற்காக வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட வேண்டிய நிதியைப் பகிர்வது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

தங்களின் உண்மையுள்ள

சுமித் அபேசிங்க
தலைவர்
நிதி ஆணைக்குழு

සභාපති / தலைவர் / Chairman (+94)011 2866724
ලේකම් / செயலாளர் / Secretary (+94)011 2866824
කාර්යාලය / அலுவலகம் / Office (+94)011 2866747
ෆැක්ස් / தொலைநகல் / Fax (+94)011 2866671 (+94)011 2866679
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail info@fincom.gov.lk
www.fincom.gov.lk

# *நிதி ஆணைக்குழு*

*இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (4) இன் பிரகாரம்*

# *அதி மேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் – 2022*

**செப்ரெம்பர்** 2021

# பொருளடக்கம்


பக்க எண்

பொருளடக்கம் - i

இணைப்புக்களின் பட்டியல் - ii

01. அறிமுகம் - 01

02. பரிந்துரைகளை செய்வதில் கவனத்திற் கொள்ளப்படும் அரசியலமைப்பு வழிகாட்டல்கள் மற்றும் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் ஏனைய விடயங்கள். - 03

03. தேசிய வரவு செலவு திட்டமும் மாகாண சபைகளிற்கான அரச கொடைகளும் - 07

04. மாகாண சபைகளுக்கான கொடைகளை பரிந்துரைப்பதற்கான மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவைகளின் மதிப்பீடு - 10

05. 2022 ஆம் ஆண்டுக்கான அரச கொடைகளை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்க்கான பரிந்துரைகள் - 20

06. மாகாண மட்டத்தில் நியாயமான ஒதுக்கீடுகள் மற்றும் வினைத்திறனான வள பயன்பாட்டு நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள் - 24

இணைப்புக்கள் - 29

## *இணைப்புக்களின் பட்டியல்*

*இணைப்பு – 01 : தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதன் மாகாண பங்கும் (2015-2019)*

*இணைப்பு – 02 : தேசிய மற்றும் மாகாண நிறுவனங்களினது முக்கிய துறைககளிலான சேவை வழங்கல்களின் தரவுகளின் சுட்டிக்கட்டல்கள்*

*இணைப்பு – 03 : மாகாண மூலதன தேவைகளின் கோரிக்கை, பரிந்துரைகள், பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் நிதி விடுவிப்பு(2016 - 2020)*

*இணைப்பு – 04 : மதிப்பீடு செய்யப்பட்ட மாகாண மொத்த மீண்டெழும் செலவுகளின்உள்ளடக்கம் - 2022*

*இணைப்பு – 05 : முற்பணக்கணக்கு B க்கான கோரிக்கைகள் -2022*

*இணைப்பு - 06 : மாகாண பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்கு மற்றும் சேகரிப்பு (2019 - 2022)*

*இணைப்பு – 07 : மாகாண சபைகளினால் கொடுப்பனவு செய்யப்படும் நோயாளிகளுக்கான சமூக உதவி தொகை -2021*

# *அத்தியாயம் 1*

## *01. அறிமுகம்*

### *1.1 பின்னணி*

*1987 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட 13 வது திருத்தத்தின் 154A - 154Q பிரிவின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டன. மேற்கூறப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு இணங்க, மாகாண சபைகளின் ஒழுங்கான செயல்பாட்டிற்காக ஒரு பரந்த நிர்வாக கட்டமைப்பை உருவாக்க 1987 ஆம் ஆண்டின் **42** ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் இயற்றப்பட்டது. மாகாண சபைகள் தங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களில் தங்கள் சொந்த நிதிச் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களை இயற்றியதன் மூலம், இப்போது அவர்கள் ஒரு விரிவான நிர்வாக கட்டமைப்பையும் கடந்த 34 ஆண்டுகளில் உருவான நிறுவன அமைப்பையும் கொண்டுள்ளன.*

*அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான சேவை வழங்கல் மற்றும் அதே அட்டவணையின் பட்டியல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் ஒத்தியங்கும் பொறுப்புகள் ஆகியவற்றுக்கு மாகாண சபைகள் பொறுப்பாகும். மாகாணங்களின் சொந்த வருமானம் மிகக் குறைவாக இருப்பதனால் மாகாண சபைகளின் சேவை வழங்கலுக்குத் தேவையான மிகப்பெரிய வளங்கள் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்டத்தால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பூர்த்தி செய்யப்படுகின்றன.*

### *1.2 நிதி ஆணைக்குழுவும் அதன் கட்டளைச் செயல்பாடும்*

*இலங்கை **ச**னநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் 154 (**R**) பிரிவு நிதி ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதுடன் நிதி ஆணைக்குழுவின் செயல்பாடுகளையும் விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை **154 R (3), (4)** மற்றும் **(5)** பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதி ஆணைக்குழுவின் கட்டளை செயல்பாட்டு பொறுப்புகள் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது;*

*உறுப்புரை **154R (3)** அரசாங்கம் ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் கலந்தாலோசனைகளுடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.*

*உறுப்புரை **154R (4)** ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களிலில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்;*

*அ) அரசாங்கத்தால் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாகவும் பல்வேறு மாகாணங்களுக்கிடையே அந்த நிதியினை பகிர்ந்து கொள்வது தொடர்பான நியமங்கள்*

*ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்*

*உறுப்புரை **154R(5)** நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும் ;*

*அ) ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகை,*

*ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்,*

*இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக்கொள்ள முன்னேற்றகரமான தேவைகள் மற்றும்*

*ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமான வேறுபாடுகளை குறைக்கவும் மகாணங்களிடையே உயர் தலா வருமானத்தை பேணுவதற்குமான முன்னேற்றகரமான தேவைகள்.*

### *1.3 நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்*

*நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வருடாந்த பாதீடிலிருந்து போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வது குறித்து அரசிற்கு பரிந்துரைகளை வழங்குவதும் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதி பகிர்வு செய்வதற்கான நியமங்கள் தொடர்பான பரிந்துரைகளை அரசிற்கு வழங்குவதும் நிதி ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும்.இதற்கான செயல்முறையில், இந்த அறிக்கையின் அத்தியாயம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு, நிதி ஆணைக்குழு;*

I. *மாகாணங்களின் வருடாந்த வளங்களின் தேவைகளை தயாரிக்கவும் சமர்பிக்கவும் மாகாணசபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்.*

II. *மாகாண சபை நிறுவனங்களுடனான விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர் மாகாண சபைகளின் தேவைகளை மதிப்பீடு செய்தல்.*

III. *தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் மாகாணங்களுக்கிடையில் அத்தகைய நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.*

IV. *தேசிய பாதீட்டில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மாகாணசபைகளின் கீழுள்ள பல்வேறு துறைகளுக்கு இடையே பகிர்ந்தளிப்பது குறித்து வழிகாட்டுதல்களை வழங்குதல்.*

V. *நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக அவர்களின் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை வகுக்க மாகாண சபைகளுக்கு உதவுதல்.*

*அரசியலமைப்பு கட்டளைக்கிணங்க நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் மேலே 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மற்றும் மேலே உள்ள i, ii மற்றும் iii இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலைகளைப் பின்பற்றி அறிக்கையின் 4 மற்றும் 5 ஆம் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. வழக்கமாக அதி மேதகு ஜனாதிபதிக்கு வழங்கும் கொள்கைப் பரிந்துரைக்கு பதிலாக தற்போதைய ஆணைக்குழு இந்த அறிக்கையின் 6 வது அத்தியாயத்தில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் வளங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் பயன்படுத்துதலில் வினைத்திறனை அதிகரிக்க செய்தல் மற்றும் மாகாண சபைகள் அனுபவிக்கும் சில சிக்கல் வேறுபாடுகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட பல நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது.*

*நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், அப் பரிந்துரைகளை அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றதிற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் ஒப்புதல் கோரி சமர்ப்பிப்பிக்கின்றார். அதன்பின், அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (7) இன் பிரகாரம் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றதிற்கு அப்பரிந்துரைகளை சமர்பிக்க நடவடிக்கை மேற்கொள்வார்.*

## *அத்தியாயம் 2*

### பரிந்துரைகளை செய்வதில் கவனத்திற் கொள்ளப்படும் அரசியலமைப்பு மற்றும் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் ஏனைய விடயங்கள்

*நிதி ஆணைக்குழு மாகாணங்களின் தேவைகளை மதிப்பீடு செய்து தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் ஆலோசனை நடத்தி கீழே தரப்பட்டுள்ள உப பந்தி 2.1 முதல் 2.7 வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு வருடாந்தம் அதன் பரிந்துரைகளை விரிவான முறையில் மேற்கொள்கிறது.*

#### *2.1 அரசியலமைப்பு வழிகாட்டல்கள் (சமச்சீரான பிராந்திய அபிவிருத்திக்கான தேவைகள் உட்பட )*

*நிதி ஆணைக்குழு அதன் பரிந்துரைகளைச் செய்வதில் பின்பற்றப்படும் முக்கிய அடிப்படை கோட்பாடுகளானது இந்த அறிக்கையின் அத்தியாயம் 1 இல் 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளிற்கமைவானதாகும்*

#### *2.2. தேசிய கொள்கை வழிகாட்டல்கள்*

*மாகாண சபைகள் அரசாங்கத்தின் தேசிய கொள்கைகள் முன்னுரிமைகளை கடைப் பிடிப்பதை உறுதி செய்வதற்காக, நிதி ஆணைக்குழு அவர்களின் தேவை மதிப்பீட்டை மேற்கொள்ளவும் அபிவிருத்தி திட்டங்களை வகுக்கவும் வழி காட்டியதுடன் அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகளை விபரிக்கும் பின்வரும் ஆவணங்களுக்கு உரிய கவனம் செலுத்தியது*

- *அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பு, " அற்புத சுபீட்சதுக்கான தொலை நோக்கு " என்பது ஒரு பிரஜையின், மனநிறைவான குடும்பம், ஒழுக்க நியாயமான சமூகம் மற்றும் சுபீட்சமான தேசம் என்பவற்றின் நான்கு மடங்கு நல் விளைவுகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட உள்நாட்டு அபிவிருத்தி மூலோபாயத்தை நோக்காக கொண்டது. சமூக, பொருளாதார, சூழல் மற்றும் அரசியல் பரிமாணங்களுக்கு உரிய கவனம் செலுத்தி முக்கிய கொள்கைகளுக்கு கொள்கை கட்டமைப்பில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.*

- *ஜனாதிபதி செயலகத்தால் 09/08/2020 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2187/27 இலக்கம் கொண்ட வர்த்தமானியில் முக்கிய துறைகளின் முன்னுரிமைகள் ஏனைய விடயங்களுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.*

#### *2.3 மிகக் கீழ்மட்டத்திலிருந்து தேவைகளை அடையாளம் காணல்*

*புதிய அரசாங்கத்தின் தொலை நோக்கும் அதன் அண்மைய அறிவிப்புகளும் மிகக் கீழ்மட்டத்திலிருந்து தேவைகளை அடையாளம் கண்டு நாட்டில் சிறந்த சமூக பொருளாதார செயல்திறனை நோக்கமாகக் கொண்டு பல விடயங்களினதும் சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்பைக் சுட்டிக்காட்டுகின்றன.*

*அதன்படி, பின்வரும் முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.*

- *உள்ளூர் விவசாயிகள், உள்ளூர் தொழில்முயற்சியாளர் மற்றும் கைத்தொழிலாளர்களை பாதுகாக்கின்ற உற்பத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்*
- *நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கல்.*
- *பாடசாலைகளில் போதுமான வசதிகளைப் பேணுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பாடங்களைப் பின்பற்ற மாணவர்களை ஊக்குவித்தல். மேலும், முன்பள்ளி, கல்வி சீர்திருத்தங்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கல்*
- *கிராமப்புற மருத்துவமனைகளில் போதுமான வளங்களையும் வசதிகளையும் பராமரித்தல் மற்றும் இலவச சுகாதார சேவைகளை வழங்குவதில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல். ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய மருத்துவ முறையைப் பாதுகாத்து ஊக்குவித்தல் .*

- *நாடு முழுவதும் குளங்களை புனரமைப்பு செய்து, பயிர்ச் செய்கையின் போது போதுமான நீரையும் வழங்குவதற்கேற்ப அபிவிருத்தி செய்தல்.*

- *ஒவ்வொரு மாகாணத்திற்கும் சமமான பகிர்வினடிப்படையில் நாட்டினது உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல். ஒவ்வொரு கைத் தொழிலிலும் சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.*

- *விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நவீன பொருளாதாரம், பெறுமதி சேர்கை மற்றும் ஏற்றுமதியை உருவாக்குத்தல்.*

- *நகர்ப்புற, கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீட்டுவசதியை அபிவிருத்தி செய்தல்*

- *பாரம்பரிய கைத்தொழில்களின் முறையான வளர்ச்சிக்கு உற்பத்தித் துறைகளில் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அணுகுமுறை.*

- *பொதுமக்களுக்கு வினைதிறனுடயதும், விரைவானதும் மற்றும் வசதியானதுமான சேவைகள் உருவாக்குதல்*

*ஆணைக்குழு தனது மதிப்பீட்டாய்வு மற்றும் பரிந்துரைகளில் மேற்கூறப்பட்ட பிரச்சனைகளையும் கவனத்திற் கொண்டுள்ளது.*

***2.4. அரசின் ஏனைய கொள்கை வழிகாட்டல்கள் (அமைச்சரவை தீர்மானங்கள்)***

*நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து அமைச்சரவை சில அவதானிப்புகள் மற்றும் சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளதோடு அதி மேதகு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளுடன் மற்றும் பின்தொடரல்களை அமைச்சரவைக்கு சமர்பித்தது.*

*இந்த அவதானிப்புகள் மற்றும் வழிகாட்டல்களை ஆணைக்குழு அதி கவனத்திற் கொள்கிறது, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் ஒத்தியங்கும் விடயங்கள் தொடர்பாக அமைச்சரவையால் அவ்வப்போது எடுக்கப்பட்ட சில முடிவுகளை ஆணைக்குழு கவனத்திற் கொள்கிறது,*

***2.5 மாகாண சபைகளுடனான கலந்துரையாடல்***

*நிதி ஆணைக்குழு மாகாண சபைகளின் தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து மாகாண அதிகாரிகளுடன் வருடாந்தம் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. இக் கலந்துரையடல்கள் ஆணைக்குழுவுக்கு மாகாண சபைகளின் பிரச்சனைகளை அடையாளம் காணவும் மிக விரைவாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளில் கவனம் செலுத்தவும் அதி மேதகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் மூலம் தீர்வுகளைக் கண்டறியவும் உதவியாக இருக்கும்.*

*முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய மாகாண சபைகளுடனான கலந்துரையாடல்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட மிக முக்கியமான விடயங்கள் அத்தியாயம் 6 இல் சேர்க்கப்பட்டுள்ளது "மாகாண அளவில் நியாயமான வள ஒதுக்கீடுகள் மற்றும் பயன்பாட்டு நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள்'' உள்ளடக்கப்பட்டுள்ளது.*

***2.6 மாகாணங்களது சமூக பொருளாதார நிலைமைகள்***

*சாத்தியமான மற்றும் ஆதிக்கம் செலுத்தும் துறை நடவடிக்கைகளுடன் அனைத்து மாகாணங்களும் தேசிய பொருளாதாரத்திற்கு நியாயமான பங்களிப்பை வழங்குகின்றன. (இணைப்பு 1 ஐ பார்க்கவும்). சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல்வேறு உத்திகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவது, தேசியப் பொருளாதாரம் மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வில் உள்ள மாகாணப் பங்குகளில் உள்ள இடைவெளிகளைக் குறைக்க உதவுகிறது. எவ்வாறாயினும், மாகாணங்களுகிடையில் குறிப்பிடத்தக்க அளவு ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வருமான ஏற்றத்தாழ்வுகளை அதைப்போலவே மாகாணங்களுக்குள் பின்தங்கிய பகுதிகள் போன்றவற்றை நாடு அனுபவிக்கின்றது .பொருளாதார அபிவிருத்தி மற்றும் வாய்ப்புகள் சீரற்ற முறையில் பரவியுள்ளன மற்றும் பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் மேல் மாகாணத்திற்குள் நடைபெறுவதுடன் அது நாட்டின் முக்கிய பிராந்தியமாக மாற்றப்படுகிறது.*

*இலங்கையில் உள்ள மக்கள்தொகை மற்றும் பொருளாதார நிலைமை மற்றும் மாகாணங்களின் வளங்கள் என்பவை ஒன்பது மாகாணங்களுக்கிடையே வேறுபட்டு காணப்படுகின்றது. ஒன்பது மாகாணங்களின் உள்நாட்டு நீர்நிலைகள் உட்பட நிலப்பரப்பு மொத்த பரப்பளவில் 5.6 % முதல் 15.9 % வரை வேறுபடுவதுடன் மாகாண மக்கள் தொகை 1.1 மில்லியனில் இருந்து 6.1 மில்லியன்கள் வரை 2019 இல் உள்ளது.மேல் மாகாணம் மிகச்சிறிய மாகாணமாக காணப்பட்டாலும், அது நாட்டின் மொத்த சன தொகையில் 28.28% என்ற பெரிய பகுதியை கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகவும் கூடுதலான பங்கான 39 % என்பதை மேல் மாகாணம் பதிவு செய்துள்ளது. வட மாகாணம் மிகக் குறைவான 4.7%. பங்கினை கொண்டுள்ளது. மாகாணங்களுக்கிடையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இடைவெளி என்பது 2018 இல் 4.1% - 38.5% ஆக உள்ளமை குறிப்பிடத்தக்கது. வடக்கு, வடமத்தி, ஊவா மற்றும் கிழக்கு ஆகிய நான்கு மாகாணங்களும் தேசிய பொருளாதாரத்தில் ஒவ்வொன்றும் 06% க்கும் குறைவாகவே பங்களிப்பு செய்கின்றன. வறுமை நிலை மற்றும் ஏனைய குறிகாட்டிகளிலும் இதே நிலைமை தான் காணப்படுகிறது.*

***அட்டவணை - 01: மாகாணங்களின் தெரிவு செய்யப்பட்ட பௌதீக,குடித்தொகை மற்றும் சமூக பொருளாதார குறிகாட்டிகள்***

| மாகாணங்கள் | நிலப்பரப்பு 2019 (ச.கி.மீ) | நடு ஆண்டு சனத்தொகை 2019 (000) | மாகாண மொ. உற்பத்தி 2019 (%) | சராசரி மாத தலா வருமானம் 2016 (ஒரு வீட்டிற்கு நபருக்கு) | வறுமை தலைச் சுட்டெண் 2016 | பல்கலைக்கழக அனுமதிகளின் எண்ணிக்கை 2020 | ஒரு மருத்துவ அதிகாரிக்கான நபர்கள் 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| **மேற்கு** | *3,684* | *6,149* | *5,849* | *14,400* | *1.7* | *29.1* | *768* |
| **மத்திய** | *5,674* | *2,766* | *1,719* | *9,890* | *5.4* | *10.8* | *1,080* |
| **தெற்கு** | *5,544* | *2,654* | *1,491* | *11,253* | *3.0* | *17.3* | *1,291* |
| **வடக்கு** | *8,884* | *1,143* | *711* | *8,434* | *7.7* | *5.8* | *1,016* |
| **வட மேற்கு** | *7,888* | *2,551* | *1,610* | *11,420* | *2.7* | *11.0* | *1,488* |
| **வட மத்தி** | *10,472* | *1,377* | *816* | *11,248* | *3.3* | *4.5* | *1,338* |
| **ஊவா** | *8,500* | *1,376* | *806* | *10,139* | *6.5* | *5.5* | *1,517* |
| **சப்ரகமுவ** | *4,968* | *2,058* | *1,145* | *9,711* | *6.7* | *9.5* | *1,463* |
| **கிழக்கு** | *9,996* | *1,729* | *866* | *8,261* | *7.3* | *6.5* | *1,095* |
| **மொத்தம்** | ***65,610*** | ***21,803*** | ***15,013*** | ***11,307*** | ***4.1*** | ***100.0*** | ***1,070*** |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,பரீட்சைத் திணைக்களம்**

*தேசிய மற்றும் மாகாண நிறுவனங்களின் முக்கிய துறைகள் மற்றும் சேவை வழங்கல் பற்றிய தரவுகளின் இணைப்பு 2 ல் உள்ளடக்கப்பட்டிருகின்றது.*

### *2.7 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் உப தேசிய மட்ட அபிவிருத்தி கட்டமைப்பு*

*இலங்கை சமத்துவ மற்றும் நலக் கொள்கையைப் பின்பற்றும் நாடாக இருப்பதால் பல நிலைபேறான அபிவிருத்திக்கான இலக்குகளை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், சர்வதேச சமூகத்தின் உறுப்பினராக, நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய நிகழ்ச்சி நிரல்-2030 ஐ ஏற்றுக்கொண்டது, இந்த இலக்குகளின் அனைத்து கூறுகளையும் அதன் அபிவிருத்தி மூலோபாயத்தில் உள்ளடக்கியுள்ளது. நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய நிகழ்ச்சி நிரல்-2030 அபிவிருத்தி செயல்முறை அபிவிருத்தி என்பது நிகழ்கால சொந்த தேவைககளை பூர்த்தி செய்வதில் சமரசம் செய்வதாக மட்டுமன்றி எதிகால தலைமுறையினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் திறன் விருத்தியாகவும் அமைகின்றது. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட எமது வழிகாட்டல்களில், ஒவ்வொரு மாகாண சபையின் தேசியக் கொள்கை*

*கட்டமைப்பு மற்றும் SDG கட்டமைப்பின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை உள்ளடக்கிய, அவர்களின் நடுத்தர கால ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் மற்றும் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை வகுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.*

# *அத்தியாயம் 3*

## தேசிய வரவு செலவு திட்டமும் மாகாண சபைகளிற்கான அரச கொடைகளும்

### *3.1 நிதி அதிகார பகிர்வு தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள்*

*இலங்கையில் மூன்று தனித்துவமான படிநிலைகள் சட்டவாக்க மற்றும் நிறைவேற்று பகுதிகளை வரையறுப்பதன் மூலம் காணப்படுகின்றன, அவை மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும். இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவெனில் மூன்றாம் படிநிலையாக காட்டப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களும் மாகாண சபையின் மேற்பார்வையின் கீழேயே அமைந்துள்ளது. அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளின் விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகள் மூன்று பட்டியல்களான, மாகாண சபைகளின் பட்டியல் (மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள்), ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்தியிலுள்ள அதிகாரங்கள்) மற்றும் ஒத்தியங்கும் பட்டியல் (இணைந்து செயலாற்றும் விடயங்கள்) என்பவற்றில் அதிகார விடயப்பரப்புக்கள் குறிப்பிடப்பட்டிருகின்றன.*

*அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் உப தேசிய மட்ட ஆளுகைகள் என்பவற்றின் பிரகாரம் , உப தேசிய மட்டங்களில் பொது முதலீடும் மற்றும் சேவை வழங்கல்களும் அரச செலவு நிறுவனங்கள் , உள்ளூராட்சி அதிகாரசபைகள் உள்ளிட்ட மாகாண சபை செலவு நிறுவனங்கள் என்பவற்றால் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபைகளின் சட்டத்தின்படி மேற்கொள்ளப்படுகிறது. மாகாண சபைகளானது மாகாண சபைகளின் பட்டியலில் உள்ள நடவடிக்கைகளை அமுல் படுத்த பொறுப்புடையதுடன் ஒத்தியங்கும் பட்டியலின் கீழுள்ள விடயங்களில் இணைந்து செயலாற்றும் பொறுப்பையும் கொண்டுள்ளது.*

*மக்களுக்கான பொது சேவை வழங்கல் என்ற ரீதியில், மாகாணத்துக்குரிய விடயங்கள் மிகப்பரந்ததொன்றாக கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதிகள், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக சேவைகள், சிறுவர் பராயகால அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, விளையாட்டு மற்றும் இது போன்ற விடயங்களையும் உள்ளடக்குகின்றது. மாகாண சபைகளால் சேகரிக்கப்பட வேண்டிய வருமான மூலங்களும் மாகாண பட்டியலில் அடங்குகின்றது. எவ்வாறாயயினும் தற்போது பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு மாகாணசபைகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மூலங்கள் போதியளவில் இருக்கவில்லை. எனவே மாகாண சபைகள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான போதியளவு நிதியை திறைசேரி வழங்க வேண்டியது கட்டாயமாகும்.*

### *3.2 மாகாண சபைகளின் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்*

*ஆரம்பத்திலிருந்தே, மாகாண சபைகள் அரச செலவினங்களைச் செய்வதற்கு அரச கொடைகளை சார்ந்திருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அரசியலமைப்பின் கீழ் அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வருவாய் மூலங்களிலிருந்தான வருமான உருவாக்கம் அவர்களின் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்கவில்லை. குறிப்பாக, 2019 இல் தேசத்தை கட்டியெழுப்பும் வரி(NBT) இரத்து செய்யப்பட்ட பிறகு நிலைமை மேலும் தற்போது மோசமடைந்துள்ளது.*

*பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் அதனைப் போலவே சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட ஒத்தியங்கும் விடயங்கள்களின் சேவைகளை வழங்குவதற்கான மீண்டெழும் தேவைகளுக்கு மேலதிகமாக, மாகாண சபைகளிற்கான மூலதன கொடைகள் மூலம் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைய வேண்டும். இருப்பினும், திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதிகளின் அளவு, மூலதனச் செலவினங்களுக்காக, நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தொகையை விட மிகக் குறைவாகவே உள்ளது என்பதனை இணைப்பு 3 ல் காணலாம். இறுதியாக அவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக பதீட்டு ஒதுக்கீட்டில் நிதி விடுவிப்பு வடிவத்தில் பெற்ற 59 % மான தொகையைப் பார்க்கும்போது, மறைமுகமாக இந்த சூழ்நிலையை கண்டுணர்ந்த நிலையில் , கடந்த ஆணைக்குழு அதன் பரிந்துரைகளில் மொத்த மூலதனச் செலவில் குறைந்தது 30% மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தினை அதி மேதகு ஜனாதிபதிக்கு கடந்த ஆண்டு வழங்கியது . இதே போன்று அதிகாரப் பரவலாக்கமுடைய ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த 30 % என்பதுவும் குறைவாக இருப்பதாகவே தெரிகின்றது.*

*மாகாண சபைகளுக்கு கிடைக்கப்பெறும் நிதி பற்றாகுறையானது என்பதற்கு மேலாக, நிதி ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பாக வேறு இரண்டு முரண்பாடுகள் இருப்பதை அவதானிக்கிறது. முதலாவதாக, பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களிற்கு மாகாண சபைகளால் பெற்றுக்கொள்ளும் மூலதன நிதிகள் அதே விடயங்களுக்காக நிரல் அமைச்சு/இராஜங்க அமைச்சு பெற்றுக்கொள்ளும் தொகையினைக்*

*காட்டிலும் மிகக் குறைவு. இரண்டாவது முரண்பாடு என்னவென்றால், மாகாண சபைகளின் மூலதனச் செலவுகள் - மீண்டெழும் செலவுகளின் விகிதாசாரமானது முழு அரசினதும் அதே மாதிரியான விகிதாசாரத்தினை விட மிகக் குறைவு, இதனைக் கீழ் காணும் அட்டவணையில் காணலாம்*

***அட்டவணை – 02: 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களின் விகிதம்***

***ரூபா.பில்***

| *செலவு விபரம்* | *தேசிய நிறுவனங்கள்* | *மாகாண சபைகள்* |
|---|---|---|
| *மூலதன செலவுகள்* | *1095.01 (28.9%)* | *40.5 (11.4 %))* |
| *மீண்டெழும் செலவுகள்* | *2694.15 (71.1%)* | *314 (88.6 %)* |
| *மொத்தம்* | *3789.16 (100%)* | *354.5 (100 %)* |

*மாகாண சபைகளில் மீண்டெழும் செலவுகள் உயர்வாக கனப்படுவதற்க்கு கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் சேவையாற்றும் அரசு ஊழியர்களின் எண்ணிக்கை மத்திய அரசில் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் அதிகம் என்ற சில நியாயப்படுத்தல்கள் இருந்தாலும், பிராந்திய அபிவிருத்தியில் எதிர்ப் பார்க்கப்படுகின்ற நிலையை அடையப்பட வேண்டுமெனில் மூலதன செலவு சார்பில் இந்த விகிதாசாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.*

### *3.3 தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கான அரச கொடைகளின் வகைகள்*

*தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு வகைகளின் கீழ் மாகாண சபைகளுக்கு நிதி ஆணைக்குழு மாகாண சபைகளிற்கான நிதி கொடைகளை பின்வரும் வடிவில் பரிந்துரைக்கிறது.*

***அ) தொகுதிக்கொடை என்பது*** *பொது சேவை வழங்கல்களை தொடர்ந்து வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான நோக்கதில் மாகாணங்களின் மீண்டெழும் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படுகிறது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி தனியாள் வேதனங்கள் என்பதே மாகாண சபையினது மீண்டெழும் செலவினங்களின் முக்கிய பகுதியாகும். இந்த கொடையில் ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்கிய உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கான மாற்றல்கள் மற்றும் மூலதன சொத்துக்களை பராமரிப்பதற்கான செலவினங்கள் என்பன உள்ளடங்குகின்றன. தொகுதிக் கொடை என்பது மாகாணங்களின் மீண்டெழும் செலவினங்களுக்கும் அந்த மாகாணத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இடைவெளியை நிரப்ப தேவையான அளவாக கணக்கிடப்படுகிறது.*

***ஆ) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை (PSDG)*** *என்பது பகிர்ந்தளிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திகளில் கவனம் செலுத்தி மூலதனம் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்வதாகும். இந்த வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகளானது நிதி ஆனைக்குழுவின் இணக்கப்பாடிற்கு அமைவாக மாகாண அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மாகாண சபைகளினால் ஒரு பொதுவான ஒருங்கிணைந்த திட்டமிடல் கட்டமைப்பில் மாகாணங்களுக்கான நடுத்தர கால அபிவிருத்தித் திட்டத்திற்கமைய தயாரிக்கப்படுகிறது .*

***பிரமாண அடிப்படையிலான கொடை (CBG)*** *என்பது மாகாண சபைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட மற்றுமொரு கொடை வடிவமாவதுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்கு விரும்பிய செலவினத்திற்காக முக்கியமாக மாகாண சபை உறுப்பினர்களுக்கான பரவலாக்கப்பட்ட பாதீட்டில் மற்றும் PSDG யின் கீழ் இடமளிக்க முடியாத சிறிய துறைகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி செயல்படுத்தும் நிறுவனங்களுக்கான கொடையாகும்.*

***வருவாய் செயல்திறன் கொடை*** *என்பது மாகாண வருவாயை ஊக்குவிப்பதற்காக மாகாண சபைகளுக்குபரிந்துரை செய்யப்படுகின்றது. இது பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான சேகரிப்பு தொடர்பான ஒரு சிறிய அளவிலான அபிவிருத்தி சார்ந்த கொடையாகும். இந்தகொடையை மாகாண சபைகள் தாம் தேவைக்கேற்றவாறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

# *அத்தியாயம் 4*

## *மாகாண சபைகளுக்கான கொடைகளை பரிந்துரைப்பதற்கான மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவைகளின் மதிப்பீடு*

*தேசிய பாதீட்டில் இருந்து மாகாண சபைகளுக்கான கொடைகளை பரிந்துரைப்பதற்கு தேவையை மதிப்பிடுவதற்கான அடிப்படையாக நிதி ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருதுகின்றது.*

- i. *இந்த அறிக்கையின் அத்தியாயம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு கட்டளை, கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய பிற விடயங்கள்.*
- ii. *2022 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் மொத்த செலவு எதிர்வு கூறல் (மதிப்பீடு -2021 இலிருந்து).*
- iii. *2022 ஆம் ஆண்டிற்கான அரசாங்க பாதீடிலிருந்து கொடைகளை கோரி மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகள்.*
- iv. *மாகாணங்களின் சமூக-பொருளாதார நிலை*
- v. *சமத்துவம் மற்றும் சமச்சீரான அபிவிருத்திக்கான தேவைகள்.*
- vi. *சமீபத்திய காலங்களில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதன் மீதான அதி மேதகு ஜனாதிபதியின் அவதானிப்புக்கள் அமைச்சரவை வழங்கிய ஒப்புதல்கள்.*
- vii. *பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானங்கள் மற்றும் சில கற்கைகளில் கண்டறியப்பட்டவைகளும்.*

### *4.1 நிதி ஆணைக்குழுவின் கடந்தகால பரிந்துரைகளும் தேசிய பாதீட்டின் எதிர்வு கூறல்களும்*

*அரசின் 2021 ஆண்டுக்கான மதிப்பீடு தெளிவான வழிகாட்டல் மற்றும் கட்டமைப்பைக் கொண்டுள்ளது, கடந்த இரண்டு வருடங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு, நடப்பு ஆண்டுக்கான மதிப்பீடு மற்றும் அடுத்த இரண்டு வருடங்களுக்கான எதிர்வு கூறல் ஆகிய ஐந்தாண்டு புள்ளிவிவரங்களைக் கொண்டுள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் திட்டமிடப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளின் தொகை முறையே ரூ. 2,789,707.1 மில்லியன் மற்றும் ரூ. 1,040,839.5 மில்லியன்களாகும்.*

*கடந்த ஆண்டுகளில் நிதி ஆணைக்குழு செலவு பாதீட்டு ஒதுக்கீடு தேசிய பாதீட்டில் அதிகாரப் பகிர்வு கட்டமைப்பின் பரிமாணங்கள் மற்றும் SDG கட்டமைப்பை உள்ளடக்கிய ஒரு சிறப்பான சேவை வழங்கல் முறையை பின்பற்ற வேண்டும் என்பதை பரிந்துரைத்துள்ளது. இதனடிப்படையில் , மத்திய அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கிடையே நிதி ஒதுக்கீடுகளில் இரட்டிப்பு தன்மையை தவிர்த்து கொள்வதற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்திற்கு நேரடியாக வகை கூறுவதை உறுதி செய்து விசேட செலவீன அலகாக கருதி பாதீட்டு தலைப்புக்களினை உருவாக்கி மாகாண சபைகளிற்கே நேரடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.*

### *4.2 மாகாண சபைகளின் செலவுத் தேவைகளும் நிதி ஆணைக்குழுவின் கொடை மதிப்பீடுகளும்*

*மாகாண சபைகளுக்கு மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளைத் தயாரிப்பதற்காக நிதி ஆணைக்குழு தனித்தனியாக வழிகாட்டுதல்களை வழங்குகிறது. மாகாண சபைகள் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளிற்கமைய அவற்றின் வருடாந்த தேவைகளைத் தயாரித்து, வருடாந்த தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து இருந்து மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடையினை கோரி, மாகாண பாதீட்டு தேவைகளை சமர்ப்பிக்கின்றன.*

*ஒவ்வொரு மாகாண சபையும் அந்தந்த மாகாணத்திற்கான SDG கட்டமைப்பு மற்றும் அரச அபிவிருத்தி மூலோபாயத்திற்கு ஏற்ப விரிவான முறையில் தங்கள் சொந்த நடுத்தர கால ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டத்தை கொண்டுள்ளது. வருடாந்த அமுலாக்கத் திட்டத்திற்கான செலவுத் தேவைகள் என்பது*

*பல்வேறு நிதி மூலங்களில் இருந்து நிதியளிப்பதற்கான நடுத்தர காலத் திட்டங்களின் இலக்குகளையும் காலவறையறையும் பிரித்தெடுத்து தயாரிக்கப்படுகின்றன. அதனடிப்படையில், ஒரு குறிப்பிட்ட வருடத்திற்கான மாகாண சபைகளின் மூலதன செலவினத் தேவை PSDG வடிவில் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி அவர்களின் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்திற்காக தயாரிக்கப்படுகிறது.*

*மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுத் தேவைகள் அந்தந்த மாகாண சபைகளால் நிறுவன மற்றும் செயல்பாட்டு ஏற்பாடுகளுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர், சொத்துக்களை பராமரித்தல், மாற்றல்கள் மற்றும் ஏனைய தேவைகளுடன் பொதுவான வடிவத்தில் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாகாண சபைகளின் செலவினத் தேவைகள் ஆணைக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு குறித்த மாகாண சபை நிறுவனங்கள் மற்றும் தேசிய மட்ட அதிகாரிகளின் கலந்தாலோசனையுடன் இறுதி செய்யப்படுகின்றன. அதே நேரத்தில், குறிப்பிட்ட மாகாண சபைகளின் மதிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான சேகரிப்புகளும் தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டன. ஒட்டுமொத்தமாக மதிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த வருவாயை மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினத்திலிருந்து கழிப்பதன் மூலம், கொடையின் மொத்த தொகை இறுதி செய்யப்படுகிறது.*

*மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களில் தங்களது சேவை வழங்கல்களை மேற்கொள்வதற்காக பின்வரும் வடிவங்களில் நிதியைப் பெறுகின்றன.*

*அ) தேசிய பாதீடிளிருந்து மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியின் பெரும்பகுதி மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடை மற்றும் குறைந்த அளவு பிராமண அடிப்படையிலான கொடை வடிவத்தில் வருகிறது (இம்முறை ஒரு சிறிய தொகை வருவாய் செயல்திறன் கொடை வடிவத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இக் கொடையானது மூலதன செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடியது*

*ஆ) மீண்டெழும் செலவினங்களுக்கான மாகாண சபைகளின் நிதி தேவைகள் தொகுதி கொடை வடிவத்தில் வருகின்றன*

*இ) மாகாண சபைகள் வாயிலாக நிரல் அமைச்சு அவர்களின் திட்டங்கள்/ நிகழ்ச்சி திட்டங்களை செயல்படுத்தும்போது நிரல் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதி.*

*ஈ) நன்கொடை நிறுவனங்களால் நிதியளிப்புடானான சிறப்பு திட்டங்களின் மாகாண அங்கங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஒதுக்கீடு.*

*மேலே உள்ள (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடைகளை பரிந்துரைப்பதற்காக மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட தேவைகள் நிதி ஆணைக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.*

***மாகாண நடுத்தர கால அபிவிருத்தி திட்டம் மற்றும் மாகாண சபைகளின் மூலதனச் செலவுத் தேவைகள்***

*பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சமமானதும் ஒருங்கிணைந்ததுமான பிராந்திய அபிவிருத்தி, சாத்தியமான வளங்களின் உச்ச பயன் ஆகியவற்றினை நோக்காக கொண்டு மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களுக்கான நடுத்தர கால அபிவிருத்தி திட்டங்களை தயாரித்துள்ளன. இந்த திட்டங்கள் பல துறைகளின் ஒருங்கிணைப்பு, பெறுபேறுகளிலான அணுகுமுறை போன்றவற்றை உள்ளடக்கி துறைகள் மற்றும் உப துறைகள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் நோக்கினை அடைவதற்கான துறைசார் நிகழ்ச்சி திட்டங்கள் நன்கு வரையறுக்கப்பட்டு வருடாந்த நிதித் தேவைகளுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன .*

*மாகாணங்களின் நடுத்தர கால ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் சேவை வழங்கல்களுடன் ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு நிறுவன பெறுபேற்று கட்டமைப்பை கொண்டுள்ளது. இது ஒவ்வொரு அபிவிருத்தி துறைக்குமான பெறுபேற்று கட்டமைப்பை உள்ளடக்கியுள்ளது(மூன்று வருட சுழற்சி முறைத் திட்டம்). மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாண சபைகளின் நிறுவன பெறுபேற்று கட்டமைப்பு என்பவற்றின் அடிப்படையில் தேசிய வரவுசெலவுத் திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடைகளிலிருந்து நிதியளிப்பதற்காக மாகாண சபைகளால் வருடாந்த தேவைகள் தயாரிக்கப்படுகின்றன.*

*4.3 அரச கொடைகளுக்கான மாகாண சபைகளின் செலவு தேவைகளை மதிப்பீடு செய்தல்*

*4.3.1. மாகாணங்களின் நிதி கொடைகளுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல் - மூலதனம்*

*மூலதன கொடைகளுக்கான மாகாண சபைகளின் மூலதனத் தேவையின் மதிப்பீடு நிதி ஆணைக்குழுவால் கீழ் தரப்பட்டுள்ள துறைகளின் தேவைகளுக்கு அமைவாக மாகாணசபைகளினால் சமர்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அந்தந்த மாகாண சபைகள் மற்றும் நிதி அமைச்சின் கீழான தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடனான தொடர் கலந்துரையாடல்களின் மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது. பின்வரும் துறைகள் அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவானவை என்பதுடன் அவை மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் மேலதிக துறைகள் குறிப்பிட்ட மாகாணத்தின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப சரியான நியாயப்படுதல்களுடன் இணைக்கப்படலாம்.*

| | | |
|---|---|---|
| * கல்வி. | * மாகாண வீதிகள் | * காணி அபிவிருத்தி |
| * மேலைத்தேச மருத்துவம் | * தோட்ட உட்கட்மைப்பு | * நீர்ப்பாசனம் |
| * சுதேச மருத்துவம் | * போக்குவரத்து | * விவசாயம் |
| * விளையாட்டு | * வீடமைப்பு | * கால்நடை வளர்ப்பு |
| * சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு | * கிராமியமின்ணிணைப்பு | * நன்னீர் மீன் வளர்ப்பு |
| * சமூக சேவைகள் | * உள்ளூராட்சி | * சிறு கைத்தொழில் |
| * கலாசார மற்றும் சமய அலுவல்கள் | * உல்லாசத்துறை<br>*கிராமிய அபிவிருத்தி | |
| * கூட்டுறவு அபிவிருத்தி | | |
| * சிறுவர் பராயகால அபிவிருத்தி | | |

*மேற்கண்ட துறைகளின் கீழ் உள்ள திட்டத்திற்கான தொகையை மதிப்பிடும் போது, மாகாணத் துறை திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான நெகிழ்வான தொகை மற்றும் மூலதன செலவு சார்ந்த முதலீடுகளுக்காக உள்ளூர் அதிகார சபைகளுக்கு இடம் மாற்றுவதற்கான தொகை நிதி ஆனைக்குழுவின் இணக்கப்பாடிற்க்கு அமைவாக PSDG யின் கீழ் ஒவ்வொரு மாகாண சபையிலும் ஒதுக்கப்படுகிறது.மேலும், பிரமாண அடிப்படையிலான கொடை நிறுவன உள்கட்டமைப்பு, மாகாண பரவலாக்கப்பட்ட பாதீட்டு திட்டம், PSDG யின் கீழ் சேர்க்கப்படாத சிறு துறைகள் மற்றும் துறைத் திட்டத்தின் உப செயல்பாடுகளின் செலவுத் தேவைகளை உள்ளடக்கியது.*

*ஒவ்வொரு துறைக்கும் மாகாண மூலதனத் தேவைகள் மாகாணத் துறை நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்டு, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையின் (PSDG) கீழ் நிதியளிப்பதற்காக அந்தந்த மாகாண சபைகளின் வருடாந்த மூலதனத் தேவைகளில் தொகுக்கப்பட்டுள்ளன. மூலதனச் செலவினத் தேவையை மதிப்பிடுவதில், மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட தேவைகளில் தொடரும் வேலைகளை முடிவுறுத்துவதற்கும் நடுத்தர கால திட்டத்தில் முன்னுரிமைப் படுத்தப்பட்ட புதிய வேலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.*

*நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படி, மாகாண சபைகளின் மூலதனத் தேவை மதிப்பீடு, ஒவ்வொரு துறைக்கும் நிதித் தேவை தேசியக் கொள்கை கட்டமைப்பை கணக்கிற் கொண்டு ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் நடுத்தர காலத் துறை பெறுபேற்று கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு மாகாணத் துறை நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்டு அபிவிருத்தி சாத்தியங்கள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் இறுதியாக உறுதிப்படுத்தும் வருடத்திற்கு போதுமான நிதியைக் கோரி நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.*

*தேசிய பாதீட்டு திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களங்களிலிருந்து மாகாண சபைக்கு பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவை மதிப்பீட்டிற்க்கு அமைவாக அரசின் நிதிப் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு பின்வரும் இரண்டு தெரிவுகளின் கீழ் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆணைக்குழு பின்வருமாறு பரிந்துரைக்க விரும்புகிறது.*

*<u>தெரிவு 01</u>*

*தெரிவு 01 என்பது பின்வருவனவற்றை கருத்திற் கொண்டு முன்வைக்கப்படுவதுடன் இது ஏற்கனவே திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது .*

*01. மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை மாகாண சபைகளுக்கு பரிந்துரைக்கும் பொறுப்பு நிதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் எதிர்கொள்ளும் நிதிப பற்றாக்குறைகள் போன்ற ஏனையவற்றைக் கருத்தில் கொண்டு மாகாண சபைகளுக்குத் தேவையான வளத்தை மதிப்பிடு செய்வதற்கான தேவையை இது குறிக்கிறது*

*02. மாகாண சபைகள் நன்கு வடிவமைப்பு செய்யப்பட்ட திட்டமிடல் கட்டமைப்பைக் கொண்டுள்ளன, அதில் அந்த நிறுவனங்கள் 5 ஆண்டு நடுத்தர காலத் திட்டங்கள் மற்றும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை வடிவமைப்பு செய்துள்ளன, அந்த வகையில் ஒவ்வொரு துறைகளிலும் உணரப்பட்ட தேவைகளை கருத்தில் கொண்டு தேவைகளை அடையாளம் காண்பது விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளது.*

*03. மொத்த மூலதனச் செலவில் குறைந்தபட்சம் 20% மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்கிறது. (கடந்த ஆணைக்குழு இந்த சதவீதம் 30% ஆக இருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது)*

*04. மாகாண சபைகள் பரிந்துரைக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியை மட்டுமே பெறுகின்றமையால் மாகாண சபைகளின் வேலைகளின் அதிகளவான பின்னடைப்பு (தேக்கமடைந்துள்ள) வேலைகளை முடிக்க வேண்டும்.*

*05. கடந்த இரண்டு வருடங்களாக பராமரிப்பு செலவீனங்களுக்காக நிதி ஒதுக்கப்படாததால் கடந்த இரண்டு வருடங்களாக பராமரிக்கப்படாத மாகாண சபைகளின் சொத்துக்களை புனரமைப்பு செய்வதற்கு போதிய நிதி வழங்க வேண்டிய அவசியம்.*

*06. மூலதனம் சார்ந்த அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்கு மாகாண நிறுவனங்களுக்கு வளங்களை வழங்க வேண்டும் (தற்போது ஆளணியினரின் சம்பளத்திற்கான நிதி மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன).*

*07. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு.*

*நிதி ஆணைக்குழு இம் முறைகளின் கீழ் ஆய்வு மதிப்பீடு செய்துள்ளது :*

| | |
|---|---|
| *குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை (PSDG* | *- ரூபா. 200 பில்லியன்* |
| *பிரமாண அடிப்படையிலான கொடை(CBG)* | *- ரூபா. 17பில்லியன்* |
| *வருவாய் செயல்திறன் கொடை* | *- ரூபா. 3பில்லியன்* |
| ***மொத்தம்*** | ***- ரூபா 220 பில்லியன்*** |

*மேற்கண்ட முன்மொழிவு ஆண்டிற்கான அரசின் மொத்த மூலதன செலவை அதிகரிப்பதற்கான மேலதிக செலவுகளை கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். தற்போது நிரல் அமைச்சு - இராஜங்க அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்ற மாகாண சபைகளுக்கான பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்ககளுக்கான நிதிகளை மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமே எதிர்ப்பார்க்கப்படுகின்றது.(இவற்றில் பெரும்பாலானவை பிராந்திய அளவில் திட்டங்களை செயல்படுத்த நிறுவன இயலுமை கொண்டிருக்கவில்லை.)*

*அட்டவணை 03 (அ) : 2022 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன கொடை (தெரிவு 01)*

**ரூ.மில்**

| *மாகாண சபைகள்* | *2022 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை* | | | |
|---|---|---|---|---|
| | *கு.ஒ.அ.கொ(PSDG)* | *பி.அ.கொ(CBG)* | *வா.செ.கொ(RPG)* | *மொத்தம்* |
| மேற்கு | *14,840* | *1,261* | *223* | *16,324* |
| மத்திய | *22,220* | *1,889* | *333* | *24,442* |
| தெற்கு | *20,240* | *1,720* | *304* | *22,264* |
| வடக்கு | *25,760* | *2,190* | *386* | *28,336* |
| வட மேற்கு | *20,100* | *1,708* | *302* | *22,110* |
| வட மத்தி | *22,900* | *1,946* | *344* | *25,190* |
| ஊவா | *24,620* | *2,093* | *369* | *27,082* |
| சப்ரகமுவ | *23,960* | *2,037* | *359* | *26,356* |
| கிழக்கு | *25,360* | *2,156* | *380* | *27,896* |
| **மொத்தம்** | ***200,000*** | ***17,000*** | ***3,000*** | ***220,000*** |

***<u>தெரிவு 02</u>***

*நிதி ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு இந்த பரிந்துரையையும் சமர்ப்பிக்க விரும்புகிறது*

*01. அடுத்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கிலும் இதுவரையில் நடைமுறையில் பின்பற்றப்பட்டதை அரசாங்கம் தொடர முடிவு செய்து, பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும் விடயங்களுக்கு கணிசமான அளவு நிதியை நிரல் அமைச்சு /இராஜங்க அமைச்சுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்(மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்குவதற்கு பதிலாக).*

*02. பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின்கீழ் வரும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளிற்கான ஒதுக்கீடுகளை நிரல் அமைச்சுக்கு நிதி ஒதுக்குவதற்கான சாத்தியக் கூறுகள்.*

*இதனடிப்படையில் இரண்டாவது தெரிவில் நிதி ஆணைக்குழு பின்வரும் தொகைகளை ஆய்வு மதிப்பீடு செய்துள்ளது*

*03. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அரசாங்கத்தின் மொத்த மூலதனச் செலவுகளைக் குறைப்பதால், மாகாண சபைகளுக்கு கிடைக்கும் நிதி (எதிர்பார்த்த விகிதத்தில் 20%) எதிர்பார்த்ததை விடக் குறைவாக இருக்கும்.*

*04. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான சாத்தியமான கட்டுப்பாடுகள்.*

*குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை (PSDG - ரூபா.90 பில்லியன்*

*பிரமாண அடிப்படையிலான கொடை(CBG) - ரூபா. 7 பில்லியன்*

*வருவாய் செயல்திறன் கொடை - ரூபா. 3 பில்லியன்*

***மொத்தம் - ரூபா 100 பில்லியன்***

***அட்டவணை 03 (ஆ): 2022 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன கொடை (தெரிவு 02)***

| மாகாண சபைகள் | 2022 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூபா. மில்) | | | |
|---|---|---|---|---|
| | கு.ஒ.அ.கொ(PSDG) | பி.அ.கொ(CBG) | வா.செ.கொ(RPG) | மொத்தம் |
| மேற்கு | 6,678 | 519.4 | 223 | 7,420.4 |
| மத்திய | 9,999 | 777.7 | 333 | 11,109.7 |
| தெற்கு | 9,108 | 708.4 | 304 | 10,120.4 |
| வடக்கு | 11,592 | 901.6 | 386 | 12,879.6 |
| வட மேற்கு | 9,045 | 703.5 | 302 | 10,050.5 |
| வட மத்தி | 10,305 | 801.5 | 344 | 11,450.5 |
| ஊவா | 11,079 | 861.7 | 369 | 12,309.7 |
| சப்ரகமுவ | 10,782 | 838.6 | 359 | 11,979.6 |
| கிழக்கு | 11,412 | 887.6 | 380 | 12,679.6 |
| **மொத்தம்** | **90,000** | **7,000** | **3,000** | **100,000** |

*ஒன்பது மாகாண சபைகளுக்கிடையில் ஒரு சீரான திட்டமிடல் கட்டமைப்பை பராமரிக்கும் வகையில் PSDG இன் கீழ் வழங்கப்படும் கொடைகளுக்கான வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பை நிதி ஆணைகுழு வழங்கும். வழக்கம்போல, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்கேற்புடன் கலந்தாலோசனை செயல்முறைக்குப் பிறகு ஆணைக்குழு மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குகிறது.*

### *4.3.2 மாகாணங்களின் நிதி கொடைகளுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல் – மீண்டெழும்*

*நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அனைத்து மாகாண சபைகளும் சமர்ப்பித்த மீண்டெழும் செலவீன தேவை கோரிக்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.*

***அட்டவணை – 0 4: 2022 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்களின் தேவை***

***ரூபா.மில்***

| ***மாகாணங்கள்*** | ***31/03/2021 அன்றான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி*** | ***தனி நபருக்கான சம்பளங்கலள் (PE)*** | ***ஏனைய மீண்டெழும் செலவுகள் (ORE **** | ***மொத்த மீண்டெழும் செலவுகள்*** |
|---|---|---|---|---|
| மேற்கு | ***63,922*** | *50,084* | *35,359* | *85,443* |
| மத்திய | ***50,113*** | *38,245* | *15,406* | *53,651* |
| தெற்கு | ***46,478*** | *34,777* | *12,327* | *47,104* |
| வடக்கு | ***36,294*** | *26,938* | *9,149* | *36,087* |
| வட மேற்கு | ***47,962*** | *34,723* | *11,096* | *45,819* |
| வட மத்தி | ***29,961*** | *22,126* | *6,872* | *28,998* |
| ஊவா | ***33,152*** | *22,830* | *6,365* | *29,196* |
| சப்ரகமுவ | ***38,601*** | *31,689* | *9,506* | *41,195* |
| கிழக்கு | ***37,668*** | *29,062* | *8,938* | *38,000* |
| **மொத்தம்** | ***384,151*** | ***290,473*** | ***115,019*** | ***405,492*** |

***குறிப்பு:*முதிரை வரி மற்றும் நீதி மன்ற தண்டப்பணம் உள்ளடங்களாக***

*மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மீண்டெழும் தேவைகள் நிதி ஆணைக்குழுவால் மாகாண சபைகளின் அதிகாரிகள். மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள, முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றன. மீண்டெழும் தேவைகளில் தனிநபர் சம்பளங்களுக்கான செலவு தேவைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் மாகாண சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினரின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. இம் மீண்டெழும் செலவுகள் மாகாண சபைகளின் வீதி அபிவிருத்தி அதிகார சபை, பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் சிறு பராயகால அபிவிருத்தி அதிகார சபைகளின் ஆளணியினரின் சம்பளங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது.*

*மேலதிகமாக, மாகாண சபைகளின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது பராமரிப்புக்கான செலவுகள், நிலுவைத் தொகை மற்றும் பொது ஊழியர்களது கடன்கள் உள்ளிட்ட ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்கான அத்தியாவசிய தேவைகள் பரிசீலிக்கப்பட்டன.*

*மீண்டெழும் செலவுகளில் பின்வருவன உள்ளடங்கியுள்ளன.*

| **தனியாள் வேதனம்** | **ஏனைய மீண்டுவரும் செலவுகள்** |
|---|---|
| - சம்பளங்களும் படிகளும்<br>- மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு<br>- ஏனைய கொடுப்பனவு | - போக்குவரத்து செலவுகள்<br>- *வழங்கல்கள்*<br>- *பராமரிப்பு செலவுகள்*<br>- *ஒப்பந்த சேவைகள்*<br>- *மாற்றல்கள்(உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணவீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, சிறுபராய அபிவிருத்து மற்றும் ஏனைய மாற்றல்கள்)*<br>- *ஏனைய மீண்டெழும் செலவுகள்* |

*எதிர்கால புனர்நிர்மான செலவைத் தவிர்ப்பதற்காக மூலதன சொத்துக்களை பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த நோக்கத்திற்காக நிதி கிடைக்கவில்லை என்ற உண்மையை கருத்தில் கொண்டு ஆணைக்குழு பரிந்துரைக்க விரும்புகிறது (தயவுசெய்து அத்தியாயம் 6 ல் பரிந்துரை 5 (அ ) வைப் பார்க்கவும்.). அந்த பரிந்துரையை செயல்படுத்த தேவையான தகவல்கள் இணைப்பு 4 -ன் நிரல் 5 -இல் கொடுக்கப்பட்டுள்ளது.*

*கேள்விகள் அதிகரித்திருப்பதாலும், மாகாண சுழற்சி நிதியில் போதிய நிதி இல்லாததாலும் தகுதியான அரசு கடன் திட்டங்களை மாகாண அரச அதிகாரிகள் அணுக முடியாததால், அரசு ஊழியர்களின் கடன்களை செலுத்துவதற்கு நியாயமான ஒதுக்கீடுகளை வழங்குமாறு மாகாண சபைகள் விடுத்த கோரிக்கையை ஆணைக்குழு பரிசீலித்துள்ளது(முற்பண கணக்கு B). எனவே, 2022 ஆம் ஆண்டில் மாகாண அரச ஊழியர்களுக்கான கடன்களை வழங்குவதற்கான பரிந்துரைகளில் ரூ. 18.33 பில்லியன் சேர்க்கப்பட்டுள்ளது (தயவு செய்து இணைப்பு -5 ஐப் பார்க்கவும்).*

*நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள், வறியவர்கள் , முதியவர்கள் மற்றும் வளர்ச்சிகுன்றிய குழந்தைகளுக்கு சமூக உதவிக்கு போதுமான நிதி ஒதுக்கீட்டுத் தேவையானது மற்ற மீண்டெழும் செலவினங்களின் கீழ் "கருதப்படுகிறது. எவ்வாறாயினும், மேற்கூறிய இலக்குக் குழுக்களுக்கு நியாயமான தொகை ஒரே மாதிரியான விகிதத்தில் மாகாணங்கள் முழுவதும் இருத்தல் பொருத்தமானது என்று நிதி ஆணைக்குழு கருதுகிறது. எவ்வாறாயினும், எங்கள் தேவை மதிப்பீடு ஏற்கனவே உள்ள சூழ்நிலையில் செய்யப்பட்டதால்,செலுத்தப்படவேண்டிய கூடுதல் மதிப்பீட்டு தொகைகள் மதிப்பீடு செய்யப்பட்ட புள்ளிவிவரங்களில் சேர்க்கப்படவில்லை. எனவே, இணைப்பு 4 -ன் நிரல் 7 -ல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட தொகைகளுக்கு மேலதிகமாக கூடுதல் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று நிதி ஆணைக்குழு பரிந்துரைக்க விரும்புகிறது.*

***மாகாண வருமான மூலங்கள்***

***i) அரச வருமான மாற்றல்கள்***

*இதுவரை செயல்பாட்டில் இருந்த வியாபார புரள்வு வரிக்கு (BTT) பதிலாக 2011 ஆம் ஆண்டில் தேசத்தை கட்டியெழுப்பும் வரியின் உட்புகுத்தலின் படி பொது திறைசேரியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட நிதிக் கொள்கை சுற்றறிக்கை எண் 01/2010 இன் மூலம் அரசாங்கத்தினால் பின்வரும் மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாகாண சபைகளுக்கு மாற்றுவதற்கான பொறிமுறை அறிமுகம் செய்யப்பட்டது.*

*அ. தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளில் 33 1/3% (NBT) – (2019 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் திகதி முதல் அரசாங்கம் தேசத்தை கட்டியெழுப்பும் வரியை இல்லாதொழிக்க தீர்மானித்துள்ளது)*

*ஆ. முத்திரை வரிகளில் 100%*

*இ. வாகன பதிவு கட்டணத்தில் 70%*

***ii) பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து வருமான சேகரிப்பு***

*அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையில் 36.01 முதல் 36.20 வரையாக இருபது வரி மற்றும் வரியல்லாத பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மூலங்கள் உள்ளடக்கப் ப்பட்டிருந்தாலும், மாகாண வருமனத்தின் முக்கிய ஆதாரங்களில் மோட்டார் வாகன உரிம கட்டணம், கலால் வரி, முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் என்பவை மட்டுமே உள்ளடக்குகின்றன. மாகாணசபைகளினால் சேகரிக்கப்படும் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் உள்ளூராட்சி அதிகரசபைகளுக்கு மாற்றப்படுகிறது.*

***2022 ஆம் ஆண்டிற்கான வருவாய் மதிப்பீடுகள்***

*மீண்டெழும் செலவுகளின் மதிப்பீட்டாய்வில் மாகாண சபைகளிற்கான வருவாய் மதிப்பீடுகளானது கட்டாயமாக*

*i) மாகாண சபைகளின் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகள் மற்றும்*

*ii) மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யவேண்டிய அரசாங்க வருவாய்களின் மதிப்பீடுகள்*

*என்பவற்றை உள்ளடக்கப்பட வேண்டும். மாகாண பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்குகள் மற்றும் வருமான சேகரிப்பு விபரங்கள் 2019-2022 வரை இணைப்பு -6 இல் கொடுக்கப்பட்டுள்ளனமாகாண சபைகளிற்கான தொகுதி கொடை என்பது மாகாணசபைகளின் மீண்டெழும் செலவீன தேவைகளாக மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து மாகாண சபைகளினது பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகளை கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.மாகாண சபைகளிற்கான அரசாங்க வருவாய்களின் மாற்றல்கள் என்பது அரசிறை கொள்கைகள் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட வேண்டியதுடன் அந்த தொகைகள் அரசிறை திணைக்களத்தினால் சமர்பிக்கப் படாததால் அத்தொகை இங்கு கழிக்கப்படவில்லை.மதிப்பீடு செய்யப்பட்ட மாகாண மொத்த மீண்டெழும் செலவு விபரங்கள் அட்டவணை -5 இல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

*அட்டவணை - 05: 2022 ஆம் ஆண்டின் மாகாண சபைகளுக்கான மீண்டெழும் கொடைகளின் மதிப்பீடுன்*

| மாகாண சபைகள் | *மீண்டெழும் செலவினம் (ரூ.மில்)* | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட செலவு | மதிப்பிடப்பட்ட வருவாய்கள் | தொகுதி கொடை (வருமான மாற்றல்கள் உள்ளடங்கலாக ) |
| மேற்கு | *70,697* | *6,475* | *64,222* |
| மத்திய | *47,025* | *2,065* | *44,960* |
| தெற்கு | *43,196* | *1,762* | *41,434* |
| வடக்கு | *32,743* | *1,095* | *31,648* |
| வட மேற்கு | *42,185* | *2,482* | *39,703* |
| வட மத்தி | *26,545* | *1,267* | *25,278* |
| ஊவா | *28,668* | *999* | *27,669* |
| சப்ரகமுவ | *37,306* | *1,377* | *35,929* |
| கிழக்கு | *34,865* | *847* | *34,018* |
| மொத்தம் | *363,231* | *18,369* | *344,861* |

*குறிப்பு: திறைசேரியிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் மாற்றல்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் தேவைகளிலிருந்து கழிக்கப்படவில்லை.*

# *அத்தியாயம் 5*

## *2022 ஆம் ஆண்டுக்கான அரச கொடைகளை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்க்கான பரிந்துரைகள்*

### *5.1 மூலதனக் கொடைக்கான பரிந்துரைகளும் நிதிப்பகிர்வுளும்*

*நிதி ஆணைக்குழு அரசியலமைப்பின் உறுப்புரை 154 R ன் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் பிராந்தியத்தில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை போக்கும் நோக்கில் முந்தைய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்ட நியமங்களின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கான தேவை மதிப்பீட்டு செயல் முறையினை மற்றும் நிதிகளின் பரிந்துரையினை தொடர்ந்து, ஆணைகுழு மாகாண சபைகளுக்கான நிதி மற்றும் பகிர்வுக்கான பரிந்துரைகளை வழங்க வேண்டும்.இச்செயல் முறையில் நிதி ஆணைக்குழு குடித்தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து காரணி பகுப்பாய்வு" என்று அழைக்கப்படும் ஒரு பன்முக புள்ளிவிபர நுட்பத்தை முன்னேற்றகரமான புள்ளிவிவர சூத்திரம் ஒன்றை உருவாக்கி மூலதன நிதியை ஒரு சீரான முறையில் பகிர்வதற்கு ஒரு கூட்டு சுட்டெண்னை பயன்படுத்தப்படுகிறது. இந்த கூட்டு சுட்டெண் பின்வரும் மாகாண மட்ட குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது*

- *மாகாணத்தின் நடு ஆண்டு சனத்தொகை*
- *மாகாணத்தின் நிலப்பரப்பு*
- *மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி*
- *வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் தொகை*
- *சராசரி மாதாந்த தலா வருமானம்*
- *ஒரு மருத்துவ அலுவலரிற்கான நபர்களளின் எண்ணிக்கை*
- *பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை*

*இந்த மாறிகளுக்கான மாகாண தரவுகள் குடித் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்டன.கூட்டுச் சுட்டெண்ணினை உருவாக்குவதற்காக காரணிப்பகுப்பாய்வு எனப்படும் பல் தரவு புள்ளிவிபர நுட்பம் பயன்படுத்தப்பட்டது.இதனடிப்படையில், அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் சதவிகிதங்கள் மூலதன நிதி ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டன.*

***அட்டவணை – 06: கூட்டு சுட்டெண் பெறுமதியும் ஒவ்வொரு மாகாணத்துக்குமானஒதுக்கீட்டிற்கான சதவிகிதமும்***

| *மாகாணங்கள்* | *கூட்டுச் சுட்டெண்* | *ஒதுக்கீட்டிற்கான சதவிகிதம்* |
|---|---|---|
| *மேற்கு* | ***0.67633*** | ***7.42*** |
| *மத்திய* | ***1.01174*** | ***11.11*** |
| *தெற்கு* | ***0.92192*** | ***10.12*** |
| *வடக்கு* | ***1.17369*** | ***12.88*** |
| *வட மேற்கு* | ***0.91576*** | ***10.05*** |
| *வட மத்தி* | ***1.04349*** | ***11.45*** |
| *ஊவா* | ***1.12125*** | ***12.31*** |
| *சப்ரகமுவ* | ***1.09137*** | ***11.98*** |
| *கிழக்கு* | ***1.15499*** | ***12.68*** |
| | | ***100.00*** |

### *5.2 மீண்டெழும் கொடைக்கான பரிந்துரைகளும் நிதிப்பகிர்வுகளும்*

*மாகாண சபைகளுக்கான மீண்டெழும் செலவுகள் சார்ந்த கொடை முற்றிலும் மீண்டெழும் செலவு தேவைகளின் இறுதி அளவு மற்றும் அந்தந்த மாகாண சபைகளின் இலக்கிடப்பட்ட வருவாய் தொகைகளைப் பொறுத்தது. மாகாண சபைகளின் செலவின தேவைகள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகள் நிதி ஆணைக்குழுவால் அந்தந்த மாகாண சபைகள் மற்றும் தேசிய பதீட்டு திணைக்களம் ஆகியவற்றின் பங்கேற்பின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டன.*

*நிதி ஆணைக்குழு மாகாண சபைகளிற்கான மீண்டெழும் செலவீன கொடை பரிந்துரைகளை மீண்டெழும் செலவீன தேவைகளாக மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து மாகாண சபைகளினது மதிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. மாகாண சபைகளிற்கான அரசாங்க வருவாய்களின் மாற்றல்கள் என்பது அரசிறை கொள்கைகள் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட வேண்டியதுடன் அவை மிக சிறிய தொகையானபடியால் அந்த தொகைகள் அரசிறை திணைக்களத்தினால் சமர்பிக்கப்படாததால் அத்தொகை இங்கு கழிக்கப்படவில்லை. அட்டவணை 5 நிரல் 4 இல் காட்டப்பட்டுள்ளது*

*எனவே, நிதி ஆணைக்குழு , மாகாண சபைகளுக்கு மீண்டெழும் செலவீன கொடை பரிந்துரையில், அந்தந்த மாகாண சபைகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகையிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகளை மட்டும் கழித்து கணக்கிடப்படும் தொகையை பரிந்துரைக்கிறது.*

### *5.3 தேசிய பாதீடிலிருந்து மாகாண சபைகளுககாண கொடையை பரிந்துரைத்தல்*

*மாகாண சபைகளின் சேவை வழங்கல்களுக்கான மூலதனம், மற்றும் மீண்டெழும் செலவின தேவைகள் மற்றும் செயல்பாடுகள் என்பன நிதி ஆணைக்குழுவால் முறையாக சம்பந்தப்பட்ட பங்கேற்பு நிறுவனங்களுடன் கலந்தாலோசிப்பதன் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது.*

*2022 ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த வரவு செலவுத் திட்ட முன்மதிப்பீடு (அச்சிடப்பட்டுள்ள அரசின் பாதீட்டு மதிப்பீடு - (2021), சேவை வழங்கல்களுக்கான மாகாண சபைகளின் செலவுத் தேவைகள், சமநிலைப்படுத்துவதற்கான மாகாணங்களின் நிலை, நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட கடந்தகால கொள்கை பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்களின் முடிவுகள் ஆகியவை நிதி ஆணைக்குழுவின் இப் பாதீட்டு பரிந்துரைகளில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டன.*

*இறுதியாக நிதி ஆணைக்குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடைகளை பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்கிறது.*

**அட்டவணை – 07(அ): தெரிவு 01 இன் கீழ் 2022 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளிற்கு பரிந்துரைக்கப்படுகின்ற மூலதன மற்றும் மீண்டெழும் கொடைகள்**

**ரூ.மில்**

| மாகாண சபைகள் | மூலதனம் | | | | % | மீண்டெழும் | % | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மா.குஅ. கொ(PSDG) | பி.அ.கொ (CBG) | வ.செ.கொ (RPG) | மொத்தம் | | தொகுதி கொடை | | தொகை | % |
| மேற்கு | 14,840 | 1,261 | 223 | 16,324 | 7.42 | 64,222 | 18.62 | 80,546 | 16.10 |
| மத்திய | 22,220 | 1,889 | 333 | 24,442 | 11.11 | 44,960 | 13.04 | 69,402 | 12.60 |
| தெற்கு | 20,240 | 1,720 | 304 | 22,264 | 10.12 | 41,434 | 12.01 | 63,698 | 11.59 |
| வடக்கு | 25,760 | 2,190 | 386 | 28,336 | 12.88 | 31,648 | 9.18 | 59,984 | 10.01 |
| வட மேற்கு | 20,100 | 1,708 | 302 | 22,110 | 10.05 | 39,703 | 11.51 | 61,813 | 11.18 |
| வட மத்தி | 22,900 | 1,946 | 344 | 25,190 | 11.45 | 25,278 | 7.33 | 50,468 | 8.26 |
| ஊவா | 24,620 | 2,093 | 369 | 27,082 | 12.31 | 27,669 | 8.02 | 54,751 | 8.99 |
| சப்ரகமுவ | 23,960 | 2,037 | 359 | 26,356 | 11.98 | 35,929 | 10.42 | 62,285 | 10.77 |
| கிழக்கு | 25,360 | 2,156 | 380 | 27,896 | 12.68 | 34,018 | 9.86 | 61,914 | 10.50 |
| **மொத்தம்** | **200,000** | **17,000** | **3,000** | **220,000** | **100** | **344,861** | **100** | **564,861** | **100** |

***அட்டவணை – 07(ஆ): தெரிவு o2 இன் கீழ் 2022 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளிற்கு பரிந்துரைக்கப்படுகின்ற மூலதன மற்றும் மீண்டெழும் கொடைகள்***

| **மாகாண சபைகள்** | **மூலதனம்** | | | | **%** | **மீண்டெழும்** | **%** | **மொத்தம்** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **மா.குஅ. கொ(PSDG)** | **பி.அ.கொ (CBG)** | **தொகுதி கொடை** | **மொத்தம்** | | **தொகுதி கொடை** | | **தொகை** | **%** |
| மேற்கு | *6,678* | *519.4* | *223* | *7420.4* | *7.42* | *64,222* | *18.62* | *71642.4* | *16.10* |
| மத்திய | *9,999* | *777.7* | *333* | *11,109.7* | *11.11* | *44,960* | *13.04* | *56069.7* | *12.60* |
| தெற்கு | *9,108* | *708.4* | *304* | *10,120.4* | *10.12* | *41,434* | *12.01* | *51554.4* | *11.59* |
| வடக்கு | *11,592* | *901.6* | *386* | *12,879.6* | *12.88* | *31,648* | *9.18* | *44527.6* | *10.01* |
| வட மேற்கு | *9,045* | *703.5* | *302* | *10,050.5* | *10.05* | *39,703* | *11.51* | *49753.5* | *11.18* |
| வட மத்தி | *10,305* | *801.5* | *344* | *11,450.5* | *11.45* | *25,278* | *7.33* | *36728.5* | *8.26* |
| ஊவா | *11,079* | *861.7* | *369* | *12,309.7* | *12.31* | *27,669* | *8.02* | *39978.7* | *8.99* |
| சப்ரகமுவ | *10,782* | *838.6* | *359* | *11,979.6* | *11.98* | *35,929* | *10.42* | *47908.6* | *10.77* |
| கிழக்கு | *11,412* | *887.6* | *380* | *12,679.6* | *12.68* | *34,018* | *9.86* | *46697.6* | *10.50* |
| **மொத்தம்** | *90,000* | *7,000* | *3,000* | *100,000* | *100* | *344,861* | *100* | *444,861* | *100.* |

# *அத்தியாயம் 6*

## *மாகாண மட்டத்தில் நியாயமான ஒதுக்கீடுகள் மற்றும் வினைத்திறனான வள பயன்பாட்டு நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள்.*

*கோவிட் -19 தொற்றுநோய் பரவல் சூழ்நிலையால் தற்போது அரசு எதிர்நோக்கியிருக்கின்ற முன்னொருபோதுமில்லாத நிதி பற்றாக்குறை பின்னணியில், செலவழிப்பதற்கு மிகக் குறைந்த நிதியில் இருந்து அதிகபட்ச நன்மைகளைப் பெறும் வழிகள் மற்றும் வழிமுறைகளைக் கண்டறிய வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, இதனை உறுதிப்படுத்தும் ஒரு நோக்கில் நிதி ஆணைக்குழு பின்வருவனவற்றை கவனத்தில் கொள்கின்றது.*

- *தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கிடையேயான வளங்களின் பகுத்தறிவு ரீதியிலான ஒதுக்கீடு,*
- *மாகாண சபைகளில் மிக அவசியமென உணரப்பட்ட பகுதிகள்/துறைகளுக்கு வளங்கள் ஒதுக்குதல்,*
- *மாகாண சபைகள் மற்றும் அதனைப்போலவே தேசிய அளவிலான முகவர்களுக்கிடையில் காணப்படும் சில முரண்பாடுகளை நீக்குதல்*

*அரசியலமைப்பு தேவைகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு மேலதிகமாக பின்வரும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்க ஆணைக்குழு விரும்புகிறது.*

1. ***மாகாண சபைகளுக்கு போதுமான நிதியை வழங்குதல்:*** *கோவிட் -19 (Covid-19 pandemic) தொற்று நோயால் அரசு அனுபவித்த நிதி தடைகளை நிதி ஆணைக்குழு முழுமையாக அறிந்திருந்தாலும், திறைசேரிக்கு அதிக சுமை ஏற்படாத வகையில் மாகாண சபைகளுக்கு இன்னும் சில நிதிகளை வழங்குவதற்கான சாத்தியம் இருப்பதால் இப் பரிந்துரையைச் செய்ய விரும்புகின்றது. இது என்னவென்றால், ஒவ்வொரு ஆண்டும் நிரல் அமைச்சுக்கள் "பகிர்ந்தளித்த" விடயங்களின் சில செயல்பாடுகளுக்கு கணிசமான அளவு நிதியைப் பெறுகின்றன, அவை அரசியலமைப்பு விதிகளின் அடிப்படையில் மாகாண சபைகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய "பகிர்ந்தளிக்கப்பட்ட " விடயங்களின் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட இத் தொகைகளில் ஒரு பகுதியையாவது எதிர்காலத்தில் வருடாந்த கொடை மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமென ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. மாகாண சபைகளும் நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தொகையினையும் விட ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மிககவும் குறைவானது மட்டுமல்லாமல் இறுதியாக விடுவிப்பு வடிவத்தில் பெறப்பட்ட தொகையும் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டையும் விட மிகக் குறைவு (இணைப்பு -3 இல் அட்டவணையின் 6 வது நிரலில் காட்டப்பட்டுள்ளவாறு ) என அங்களாய்ப்பதனை நிதி ஆணைக்குழு அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறது கடந்த ஆண்டு அதி மேதகு ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்பட்ட, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் அரசின் மொத்த மூலதன செலவில் குறைந்தது 30% மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தது. எவ்வாறாயினும்,நிரல் அமைச்சுக்களும்/இராஜங்க அமைச்சுக்களும் நாட்டின் முழு அல்லது பரந்த புவியியல் பகுதியின் நலனுக்காக தேசிய நிகழ்ச்சி திட்டங்கள் அதனைப் போலவே பாரிய அபிவிருத்தி திட்டங்களில் பாரிய முதலீடு செய்யவேண்டி இருக்கின்றது என்பதனை உணர்ந்தமையால், தற்போதைய ஆணைக்குழு மூலதன பாதீட்டு ஒதுக்கீட்டில் குறைந்தது 20% நேரடி கொடை வடிவில் மாகாணசபைகளுக்கு முன்மொழிய விரும்புகிறது.*

***2.மாவட்டங்கள்/பிராந்தியங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள்/நடவடிக்கைகளை அடையாளம் காண்பதில் மாகாண சபைகள் மற்றும் நிரல் அமைச்சுகளுக்கிடையேயான ஆலோசனை*** *மாகாண நிறுவனங்களுடனான எம் கலதுரையடல்களின் போது நிரல் அமைசுக்களினால் அமுலாக்குவதற்கு முன்மொழியப்பட்ட திட்டங்கள் /நடவடிக்கைகள் மாகாணத்தினால்*

*உணரப்பட்ட உண்மையான தேவையோ அல்லது நிரல் அமைசுக்களினால் முடிவு செய்யப்பட்ட இடங்கள் உண்மையில் மிகவும் பொருத்தமான இடங்கள் அல்ல என சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, அணைக்குழு மாகாணங்களில் இத்தகைய திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துவதில் மாகாண சபைகளின் கவனத்தை பெற அனைத்து நிரல் அமைச்சுக்கும் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென பரிந்துரை செய்கிறது.*

3. ***மாகாண மற்றும் மாவட்ட அடிப்படையில் ஒவ்வொரு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயத்திற்கும் ஒதுக்கப்படும் தொகையை அடையாளம் காணல்:*** *பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் இணைந்து செயலாற்றும் ஒத்தியங்கும் விடயங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாவட்டத்திற்கும் நிரல் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய தொகையை மாகாண சபைகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்க முடிந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். (மேலே 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை எதிர்காலத்தில் தொடரப்பட வேண்டும் என்றால்). அவ்வாறாயின் மாகாண சபைகள் மாகாணத்தின் பிராந்திய குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அவர்கள் பெறும் வரையறுக்கப்பட்ட நிதியை வினைத்திறனுடன் ஒதுக்குவதற்கு சிறந்த சூழ்நிலையாக இருக்கும். சமச்சீரரான பிராந்திய அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்கில் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மாகாண அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சனையாக மேற்கண்ட தகவல் மாகாண மற்றும் மாவட்ட அடிப்படையில் கிடைக்காதது கண்டறியப்பட்டுள்ளது.*

4. ***மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் தேசிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்சிதிட்டங்களை செயல்படுத்துவதில் மாகாண சபைகள் மேலும் ஈடுபடுதல்:*** *நிரல் அமைச்சுக்கள்/இராஜங்க அமைச்சு , துறைகள் அல்லது மத்தியில் உள்ளமுகவர்கள் / மாவட்ட/ மாகாண துணை அலுவலகங்களில் இருக்கும் மனித வளங்களுடன் ஒப்பிடும் போது, மாகாண சபைகள் நன்கு நிறுவப்பட்ட நிறுவன அமைப்பைக் கொண்டுள்ளன, இது கடந்த 34 ஆண்டுகளில் உருவானது. நிரல் அமைச்சுக்களின் உப தேசிய மட்ட அளவிலான அலுவலகங்கள், திணைக்களங்கள் அல்லது மத்தியில் உள்ள முகவர்களை விரிவுபடுத்தல் அல்லது அவற்றை செயல்படுத்த மாகாணங்கள்/மாவட்டங்களில் திட்ட அலுவலகங்கள் இருப்பதற்குப் பதிலாக அரசாங்கத் திட்டங்கள் மற்றும் நிகழ்சிதிட்டங்களை செயல்படுத்துவதில் மேலும் மேலும் அவர்களைப் பயன்படுத்த அதிக வாய்ப்பு உள்ளது. அரசாங்க அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மாகாண சபைகளின் நிறுவன அமைப்பையும் மனித வளங்களையும் பயன்படுத்த அரசாங்கம் சமீபத்தில் எடுத்த முயற்சியை பெரிதும் பாராட்டுகின்ற அதேவேளை, மாகாண சபைகளின் நிறுவன அமைப்பை பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும் தேசிய திட்டங்கள் குறிப்பாக விசேட திட்டங்களில் மாகாணக் கூறுகளை அதிகமாகப் பயன்படுத்துமாறு ஆணைகுழு பரிந்துரைக்கிறது.*

5. ***மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளின் போது குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கான நிதி இருப்பினை உறுத்திப்படுத்தல்***

*அ)* ***பராமரிப்பு செலவுக்கான நிதியை வழங்குதல்;*** *நிதி ஆணைக்குழுவின் வலுவான நியாயப்படுத்தல் இருந்தபோதிலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் மூலதன சொத்துக்களை பராமரிக்க மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இது எதிர்காலத்தில் தவிர்க்க முடியாத மூலதனச் சொத்துக்களை புனரமைப்பு செய்வதற்கான நிதி தேவைகளை அதிகரிக்கும். நடப்பு ஆண்டில் பழுது பார்ப்பதன் மூலம் இத்தகைய செலவுகளைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தொடர் பராமரிப்புக் செலவுக்காக ரூ 13.5 பில்லியனை (இணைப்பு 4 இன் நிரல் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) அதிக முன்னுரிமையாகக் கருதி பரிந்துரைக்க விரும்புகிறது.*

*ஆ)* ***சிறு துறைகளால் எதிர்நோக்கப்படும் பாதகமான நிலைமைகள்;*** *இணைப்பு 3 மாகாண சபைகள் கோரிய தொகைகள், நிதி ஆணைக்குழுவினால் கவனமாக மேற்கொள்ளப்பட்ட தேவை மதிப்பீட்டிற்குப் பிறகு பரிந்துரைக்கப்பட்ட தொகைகள், திறைசேரியால் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் இறுதியாக பிராந்தியத்தில் உள்ள மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்ட தொகை ஆகியவற்றை 5 ஆண்டுகளுக்கு காட்டுகிறது. இது பாதீட்டு ஒதுக்கீடுகளின் பிராந்தியத்துக்கான தொகையின் 59 % ஆகும். இத்தகைய சூழ்நிலையில், சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதன கொடைக்கான*

*பாதீட்டு மதிப்பீடுகளில் மாகாண சபைகளுக்கான முக்கியத் துறைகளில் பகிர்ந்தளிக்கும் நடைமுறை தொடர்ந்தால் மாகாண சபைகளின் ஏனைய பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கு ஒதுக்கப்படும் சிறு தொகை திறனும் வரையறுக்கப்படும். எனவே இத்தகைய சூல்ல்நிலை திருத்தப்பட வேண்டுமென ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.*

இ) **நோய்வாய்ப்பட்டவர்களுக்கான சமூக உதவி தொகை;** *சமுதாயத்தின் நோய்வாய்ப்பட்ட, வறிய/ அவசியமான பிரிவினருக்கு சமூக உதவி: மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், மேற்கண்ட நடவடிக்கைகள் மாகாண சபைகளின் முழுப் பொறுப்பாகும். இருப்பினும், இணைப்பு 7 இல் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, இத்தகைய வகையினருக்கு செலுத்தப்படும் தொகை மிகவும் போதுமானதாக இல்லை மற்றும் ஒரே மாதிரியான வகையினருக்கு வழங்கப்படும் தொகை ஒரு மாகாணத்திலிருந்து மற்றொன்றுக்கு வேறுபட்டது. இதே நேரத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஒவ்வொரு காசநோயாளிக்கும் (காசநோய்) மாதந்தோறும் ரூபா.5000 அவர்களின் சிகிச்சை காலத்தில் வழங்க பரிந்துரைத்துள்ளார் எனவே,இவிடயங்கள் அனைத்தையும் கவனத்திற் கொண்டு, இந்த சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்காக, நிதி ஆணைக்குழு குறிப்பிட்ட தொகைகள் (எந்த மாகாண சபைகளாலும் ஒரு குறித்த வகையினருக்கு செலுத்தப்படும் அதிகபட்ச தொகையின் விகிதத்தில்) அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு அதற்கேற்ப மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு வகை பயனாளிகளுக்கும் நிதி வழங்கப்பட வேண்டுமென விரும்புகிறது*

*ஈ) சமூக மட்டத்தில் கணிசமான அளவில் உள்ளூராட்சி மன்றங்கள் வேலையில் ஈடுபடுவதனால் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடையின் (PSDG) கீழ் சிறப்பு மூலதன கொடை வழங்கப்பட வேண்டும்.*

*6.* **தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையை ஏற்றுக்கொள்வது:** *நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகளை குறிப்பிடுவதில், அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (5) இல் ''சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை '' அடையும் நோக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே பரிந்துரை 1 -ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன்படி நிரல் அமைச்சுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான கிடைக்கும் வளங்களுடன் ஒப்பிடும்போது மாகாண சபைகளால் பெறப்பட்ட நிதி போதுமானதாக இல்லை என்பதன் காரணமாக இந்த நோக்கத்தை மாகாண சபை முறையால் மட்டுமே அடைய முடியாது என்று இந்த ஆணைக்குழு நம்புகிறது. இரண்டாவதாக, மையத்தில் உள்ள நிறுவனங்களுக்கு (நிரல் அமைச்சு மற்றும் இராஜங்க அமைச்சு ) திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை முழு நாட்டினதும் நலனுக்காக அல்லது மாகாண எல்லைகளுக்கு அப்பால் விரிந்துள்ள ஒரு பெரிய புவியியல் பகுதியில் செயல்படுத்துவதற்கு பொறுப்புள்ளது. எனவே நிரல் அமைச்சு மற்றும் இராஜங்க அமைச்சின் நிறுவனங்கள் பல்வேறு திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில்" சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி " என்ற கருத்தை திட்டமிடல் செயல்பாட்டில் வலியுறுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, " சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை " அடைவதற்கு தொழிற்படும் போது, "சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை" நோக்காக கொண்டு மையத்தில் வளங்களை ஒதுக்குவதற்கு பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறி முறையை ஏற்றுக்கொண்டு பொறுப்பான நிரல் அமைச்சு/இராஜங்க அமைச்சு மற்றும் நன்கு அபிவிருத்தியடைந்த திட்டமிடல் பொறிமுறையைக் கொண்ட மாகாண சபைகளுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஒருங்கிணைத்து, ஒரு பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையை பின்பற்றுவது அவசியம். மாகாணங்கள்/ மாவட்டங்களில் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிரல் அமைச்சுக்களால் நிதி ஒதுக்கீடு செய்யும்போது சில விகிதங்கள் நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பிராந்திய சமத்துவமின்மையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு சில அளவுகோல்களைப்பயன்படுத்த ஆணைக்குழு ஆலோசனை வழங்குகிறது.இதன் காரணமாக பின்தங்கிய பிராந்தியங்கள் இந்த திட்டங்களின் கீழ் நியாயமான பங்கைப் பெறும்..*

7. ***வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள்/ நிகழ்ச்சிகளின் கீழ் வழங்கப்பட்ட நிதி உதவிக்கான பயனாளிகளின் பங்களிப்பு விகிதத்தை நெறிப்படுத்துதல்***: *வாழ்வாதார திட்டங்களில் உதவி வழங்கும்போது குறைந்தபட்சம் 50% செலவை (சிறப்புத் திட்டங்களுக்கு குறைந்த சதவீதம்) ஏற்க வேண்டும் என்று நிதி ஆணைக்குழு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளதுடன் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள்/ நிகழ்ச்சிதிட்டங்களின் கீழ், குறிப்பிட்ட பயனாளிகளின் பங்களிப்பினை உறுதி செய்வதோடு, கிடைக்கக்கூடிய வளங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு உதவிகளை அச் செயல்திட்டதிடற்காக வழங்குவதற்காகவாகும். எவ்வாறாயினும், இதே போன்ற திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களில் சில சமயங்களில் ஒரே புவியியல் பகுதியில் நிரல் அமைசுக்களினால் செயல்படுத்தப்படும் பயனாளிகளின் பங்களிப்பு விகிதம் குறைந்த அல்லது பூஜ்ஜியமாகும். எனவே, மாகாண சபைகளுக்கும் நிரல் அமைசுக்களுக்கும் ஒரே மாதிரியான பயனாளிகளின் பங்களிப்பு விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைக்குழு முன்மொழிகிறது.*

8. ***கட்டுமானத் திட்டங்களில் நிர்வாகச் செலவை ஒதுக்குவதில் உள்ள முரண்பாடுகளைத் தவிர்ப்பது:*** *நிதி ஆணைக்குழு மாகாண அதிகார சபைகளுக்கு அவை செயல்படுத்திய கட்டுமானத் திட்டங்களுக்கான நிர்வாகச் செலவை ஒதுக்குவதில் கொள்முதல் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளது. கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி, திட்டத்தின் மதிப்பில் 1% நிர்வாகச் செலவாக ஒதுக்கப்படலாம். இருப்பினும், சில நிரல் அமைச்சுக்கள் மாகாணங்கள்/மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு அதிக வீதத்தில் நிர்வாக செலவை ஒதுக்க அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன. இந்த ஒழுங்கின்மையை சரிசெய்யும் பொருட்டு, நிதிஆணைக்குழு, மாகாண சபைகள் மற்றும் நிரல் அமைச்சுக்கான நிர்வாகச் செலவை ஒதுக்குவதில் ஒரு சீரான அமைப்பைப் பராமரிக்க பரிந்துரைக்கின்றது*

9. ***மாகாண மட்டத்தில் உள்ள அரச ஊழியர்களும் கடன்களைப் பெறுவதில் சமமாக நடத்தப்படுதல்:*** *அரச ஊழியர்களின் அடிப்படை சம்பள அளவுகள் அதிகரிப்பு மற்றும் குறிப்பாக மாகாண கல்வி மற்றும் சுகாதார துறைகளில் மாகாண ஊழியர்களின் தொகை அதிகரிப்பு காரணமாக, மாகாண அதிகாரிகள் மாகாணங்களில் தற்போதைய சுழற்சி நிதி தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்பதால்,அரச ஊளியர்களின் முற்பண கணக்குக்கு ஆண்டு தோறும் போதுமான நிதி ஒதுக்கீட்டு கோரிக்கைகளை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். குறிப்பாக, சுழற்சி நிதி மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதால், மாகாண அரச ஊழியர்கள் அரசாங்கத்தில் தங்கள் சக ஊளியர்களைவிட கடன்/ முற்பணம் பெற மிக நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருகிறது, இது மாகாண அரச ஊழியர்களுக்கு குறிப்பாக கல்வி மற்றும் சுகாதார துறை ஊழியர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறது. எனவே, அந்தந்த மாகாணங்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, நிதி ஆணைக்குழு அத்தகைய தேவையை பூர்த்தி செய்ய. இணைப்பு -05 இல் காட்டப்பட்டுள்ளபடி இதற்காக ரூபா .18.33 பில்லியன் கூடுதலாக ஒதுக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கின்றது .*

10. ***சுகாதார சேவை வழங்களில் மேலைத்தேய மற்றும் சுதேச மருந்துகளின் ஒருங்கிணைப்புகளைப் பயன்படுத்துதல்:*** *தற்போது இந்த இரண்டு அமைப்புகளின் கீழ் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் பிரிவுகளில் தனி நிறுவன அமைப்புகள் மூலம் சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு அமைப்புகளின் சேவைகளையும் ஒருங்கிணைந்த முறையில் வழங்க முடிந்தால், இதன் விளைவு பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தற்போதைய தொற்றுநோய் சூழ்நிலையில் இந்த இரண்டு அமைப்புகளுக்கும் இடையே இத்தகைய ஒத்துழைப்பு இருப்பதன் பயன் மிகவும் உணரப்பட்டது. எனவே, இந்த இரண்டு குழுக்களும் தங்கள் சேவை விநியோகத்தில் ஒருங்கிணைந்த பொறிமுறையைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.*

11. ***பாதீட்டு நோக்கங்களுக்காக மாகாண சபைகளை விசேட செலவின அலகுகளாக வகைப்படுத்துதல்:*** *கடந்த ஆணைக்குழு கடந்த ஆண்டு சமர்ப்பித்த மேற்கூறப்பட்ட பரிந்துரையை தற்போதைய ஆணைகுழுவும் பரிந்துரைக்க விரும்புகிறது. அதி மேதகு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையினால் 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தும் வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.இது தற்போது நடைமுறையில் உள்ள நிரல் அமைச்சின் ஊடாக அறிக்கையிடும் முறைக்கு பதிலாக பிரதம*

*செயலாளர்கள் பாராளுமன்றதிற்கு நேரடியாக பொறுப்புக் கூறுவதை உறுதி செய்வதுடன் திறைச்சேரியிலிருந்து மாகாண சபைகள் நிதியினை பெற்றுக்கொள்ளும் செயல்முறையை எளித்தக்கும்.*

*நாங்கள் இந்தப் பரிந்துரைகளை தங்களது உயர்வான கவனத்துக்கு சமர்பிக்கின்றோம்.*

# இணைப்புக்கள்

**தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதன் மாகாண பங்கும் 2015-2019**

**தற்போதைய சந்தை விலையில்**

**ரூ. மில்**

| மாகாணம் | 2015 | | 2016 | | 2017 | | 2018 | | 2019 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ.உ.உ | % | மொ.உ.உ | % | மொ.உ.உ | % | மொ.உ.உ | % | மொ.உ.உ | % |
| மேற்கு | 4,365,166 | 39.9 | 4,643,441 | 38.7 | 5,061,327 | 38 | 5,611,238 | 39.3 | 5,848,850 | 39 |
| மத்திய | 1,161,070 | 10.6 | 1,448,917 | 12.1 | 1,613,128 | 12.1 | 1,685,393 | 11.8 | 1,719,070 | 11.5 |
| தெற்கு | 1,105,453 | 10.1 | 1,203,323 | 10 | 1,332,555 | 10 | 1,446,749 | 10.1 | 1,490,532 | 9.9 |
| வடக்கு | 452,649 | 4.1 | 496,451 | 4.1 | 549,750 | 4.1 | 587,817 | 4.1 | 711,459 | 4.7 |
| வட மேற்கு | 1,162,834 | 10.6 | 1,297,334 | 10.8 | 1,455,091 | 10.9 | 1,490,768 | 10.4 | 1,609,563 | 10.7 |
| வட மத்தி | 644,667 | 5.9 | 696,804 | 5.8 | 748,798 | 5.6 | 809,019 | 5.7 | 815,743 | 5.4 |
| ஊவா | 609,781 | 5.6 | 617,033 | 5.1 | 772,204 | 5.8 | 795,990 | 5.6 | 806,391 | 5.4 |
| சப்ரகமுவ | 824,606 | 7.5 | 957,433 | 8 | 1,047,598 | 7.9 | 1,055,957 | 7.4 | 1,145,225 | 7.6 |
| கிழக்கு | 624,395 | 5.7 | 635,325 | 5.3 | 747,652 | 5.6 | 807,977 | 5.7 | 866,121 | 5.8 |
| மொத்தம் | 10,950,621 | **100** | **11,996,083** | **100** | **13,328,103** | **100** | **14,290,907** | **100** | **15,012,953** | **100** |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2020

***அட்டவணை – அ:தேசிய மற்றும் மாகாண நிறுவனங்களினது முக்கிய துறைகளிளான சேவை வழங்கல்களின் தரவுகளின் சுட்டிக்கட்டல்கள்***


***அ) சுகாதார சேவைகள்***

***நிரல் அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாணசபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளின் நிதி ஒதுக்கீடுகளும் கட்டில்களின் இயலளவுடன் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை***

| வைத்தியசாலைகள் | நிரல் அமைச்சு | | மாகாண சபைகள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | கட்டில்கள் | எண்ணிக்கை | கட்டில்கள் |
| தேசிய வைத்தியசாலை | 2 | 5,723 | - | - |
| போதனா வைத்தியசாலை | 15 | 14,208 | - | - |
| விசேட வைத்தியசலைகள் | 9 | 3,342 | 1 | 46 |
| மாகாண பொது வைத்தியசாலை | 2 | 3,970 | - | - |
| மாவட்ட பொது வைத்தியசாலை | 11 | 7,952 | 9 | 4,872 |
| தள வைத்தியசாலை தரம் A | 4 | 1,339 | 24 | 7,256 |
| தள வைத்தியசாலை - தரம் B | 3 | 718 | 50 | 7,675 |
| பிரதேச வைத்தியசாலை - தரம் -A | 1 | 228 | 75 | 6,108 |
| தள வைத்தியசாலை - தரம் B | 1 | 54 | 138 | 7,535 |
| பிரதேச வைத்தியசாலை - தரம் C | 1 | 59 | 258 | 6,032 |
| ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவு | - | - | 499 | 198 |
| மொத்தம் | **49** | **37,593** | **1,054** | **39,722** |

*மூலம் :சுகாதார அமைச்சு*

*ரூ.மில்*





*மூலம்: சுகாதார அமைச்சு : நிதி கூற்றுக்கள் மற்றும் பாதீட்டு மதிப்பீடுகுறிப்பு: மாகாணங்களுக்கான மூலதன ஒதுக்கீடு = PSDG+ HSDP*

ஆ) கல்வி

**அட்டவணை – ஆ: தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைகளும்(2020) , நிரல் அமைச்சு மற்றும் மாகாணசபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளின் நிதி ஒதுக்கீடுகளும்(2017 -2020**

| மாகாணம் | தேசிய பாடசாலைகள் | | மாகாண பாடசாலைகள் | |
|---|---|---|---|---|
| | பாட சா லை கள் | மாண வர்கள் | பாட சா லை கள் | மாணவர் கள் |
| மேற்கு | 74 | 219592 | 1281 | 708,285 |
| மத்திய | 54 | 89133 | 1,464 | 448,840 |
| தெற்கு | 67 | 156,262 | 1040 | 361,135 |
| வடக்கு | 22 | 28,538 | 963 | 194,795 |
| வட மேற்கு | 37 | 81,103 | 1208 | 422,050 |
| வட மத்தி | 15 | 33,725 | 800 | 264,006 |
| ஊவா | 36 | 50,994 | 860 | 236,829 |
| சபரகமுவா | 28 | 71,198 | 1091 | 318359 |
| கிழக்கு | 40 | 66,267 | 1075 | 312,574 |
| மொத்தம் | 373 | 796,812 | 9782 | 3,266,873 |




மூலம் :தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

இ) வீதிகள்

**அட்டவணை – இ : வீதி வலையமைப்பு – வீதிகளின் நீளம் கிலோ மீட்டரில் மற்றும் அண்மைய மற்றும் கடந்தகால ஒதுக்கீடுகள்**

| மாகாணம் | தேசிய வீதிகள் A, B மற்றும் அதிவேக . | மாகாண வீதிகள் C & D |
|---|---|---|
| மேற்கு | 1,712 | 1,952 |
| மத்திய | 1,747 | 2,244 |
| தெற்கு | 1,609 | 1,630 |
| வடக்கு | 1,259 | 2,120 |
| வட மேற்கு | 1,355 | 2,745 |
| வட மத்தி | 1,194 | 1,948 |
| ஊவா | 1,164 | 2,371 |
| சபரகமுவ | 1,225 | 2,623 |
| கிழக்கு | 1,171 | 1,121 |
| மொத்தம் | 12,436 | 18,754 |

| ஆண்டு | மாகாண சபைகளுக்கான வீதி துறையின் PSDG யின் கீழான ஒதுக்கீடு ரூ.மில் | |
|---|---|---|
| | மாகாண திணைக்களங்கள் | உள்ளூராட்சி மன்றங்கள் |
| 2014 | 1,979.0 | 887.0 |
| 2015 | 2,234.0 | 1,001.0 |
| 2016 | 3,149.0 | 880.0 |
| 2017 | 1,754.0 | 478.0 |
| 2018 | 3,670.0 | 612.0 |
| 2019 | 3,706.0 | 1,040.0 |
| 2020 | 1383.0 | 809.0 |
| 2021 | 5,150.0 | 565.0 |

மூலம்:இலங்கை மத்திய வங்கி

***ஈ)விவசாயம்***

***அட்டவணை – ஈ:விவசாய துறையும் மாகாண சபைகளுக்கான குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடை (PSDG) ஒதுக்கீடுகளும் -2021***

| மாகாணங்கள் | விவசாய நிலம் (ஏக்கர்) 2014 | துறையின் வேலைவாய்ப்பு 2019 | விவசாய அபோசனை அலுவலகங்களின் எண்ணிக்கை | விவசாய செயடற் பிரிவு எண்ணிக்கை | PSDG ஒதுக்கீடுகள் 2021ரூ.மில். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விவசாயம் | கால்நடை | உள்ளூர் மீன்பிடி |
| மேற்கு | 458,360 | 5.2 % | 56 | 243,094 | 75 | 55 | 5 |
| மத்திய | 665,949 | 31.9 % | 90 | 302,403 | 100 | 70 | 10 |
| தெற்கு | 653,428 | 28.4 % | 112 | 345,562 | 125 | 70 | 18 |
| வடக்கு | 298,847 | 29.3 % | 161 | 122,862 | 100 | 80 | 23 |
| வட மேற்கு | 928,422 | 27.1 % | 46 | 382,150 | 105 | 70 | 28 |
| வட மத்தி | 745,671 | 45.2 % | 37 | 262,447 | 125 | 90 | 42 |
| ஊவா | 615,669 | 52.9 % | 101 | 233,412 | 150 | 90 | 15 |
| சபரகமவ | 625,947 | 33.0 % | 45 | 282,312 | 90 | 60 | 20 |
| கிழக்கு | 411,038 | 29.5 % | 123 | 137,101 | 200 | 125 | 25 |
| **மொத்தம்** | **5,403,331** | **25.3 %** | **771** | **2,311,343** | **1,070** | **710** | **186** |

மூலம் :விவசாய சேவைகள் திணைக்களம் ,தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களம

***உ) உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள்***

***அட்டவணை- உ:உள்ளூராட்சி மன்றங்களும் சேவை வழங்கலுக்கான PSDG ஒதுக்கீடுகளும் 2021***

| மாகாணங்கள் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் | PSDG ஒதுக்கீடுகள் 2021 (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| மேற்கு | 07 | 14 | 28 | **114** |
| மத்திய | 04 | 06 | 37 | 179 |
| தெற்கு | 03 | 04 | 42 | 87 |
| | | | | |
| வடக்கு | 01 | 05 | 28 | 199 |
| வட மேற்கு | 01 | 03 | 29 | 115 |
| வட மத்தி | 02 | 00 | 25 | 217 |
| ஊவா | 02 | 01 | 25 | 100 |
| சபரகமுவ | 01 | 03 | 25 | 145 |
| கிழக்கு | 03 | 05 | 37 | 146 |
| **மொத்தம்** | **24** | **41** | **276** | **1,302** |

**இணைப்பு** *– 03*

***மாகாண மூலதன தேவைகளின் கோரிக்கை, பரிந்துரைகள், பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் நிதி விடுவிப்பு (2016 - 2020)***

*(ரூ.மில்)*

| ஆண்டு (1) | மாகாண சபைகளின் மூலதன தேவை கோரிக்கை (2) | நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நிதி (3) | பதீட்டு ஒதுக்கீடு (4) | கட்டுநிதி விடுவிப்பு (5) | ஒதுக்கப்பட்ட தொகையில் விடுவிப்பு விகிதம் (6)= 100*(5)/(4) |
|---|---|---|---|---|---|
| 2020 | 102,137 | 99,000 | 15,376 | 12,756 | 82.96 |
| 2019 | 98,854 | 40,000 | 27,334 | 13,581 | 49.68 |
| 2018 | 82,588 | 57,000 | 25,788 | 16,148 | 62.61 |
| 2017 | 85,243 | 38,432 | 35,809 | 23,769 | 66.37 |
| 2016 | 62,385 | 56,000 | 33,061 | 15,537 | 46.99 |
| **மொத்தம்** | **431,207** | **290,432** | **137,368** | **81,791** | **59.54** |

*மூலம் : நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களம்*

**இணைப்பு – 04**

***மதிப்பீடு செய்யப்பட்ட மாகாண மொத்த மீண்டெழும் செலவுகளின் வகைப்படுத்தல் - 2022***

*(ரூ. 000')*

| மாகாணங்கள் | உள்ளூராட்சி மன்றங்களின் மாற்றல்கள் உட்பட மொத்த தனியாள் வேதனங்கள் | ஏமீசெ ( ORE ) | | | | | | | மொத்த மீண்டெழும் செலவுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | போக்குவரத்து | வழங்கல்கள் | பராமரிப்பு செலவுகள் | ஒப்பந்த சேவைகள் | மாற்றல்கள் **உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்ந்த | ஏனைய மீண்டெழும் செலவுகள் | மொத்தம் | |
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* | *(9)=(3+4+5+6+7+8)* | *(10)=(2+9)* |
| மேற்கு | *62,142,581* | *463,310* | *1,454,120* | *2,300,000* | *2,667,516* | *1,668,153* | *1,540* | *8,554,639* | *70,697,220* |
| மத்திய | *42,098,166* | *337,423* | *677,578* | *2,030,000* | *982,760* | *894,819* | *3,909* | *4,926,489* | *47,024,655* |
| தெற்கு | *38,358,997* | *423,695* | *976,523* | *1,065,000* | *1,268,770* | *1,102,755* | - | *4,836,743* | *43,195,740* |
| வடக்கு | *28,552,691* | *185,305* | *852,375* | *1,305,000* | *871,762* | *715,160* | *260,749* | *4,190,351* | *32,743,042* |
| வட மேற்கு | *37,446,881* | *536,681* | *951,493* | *1,210,000* | *897,023* | *1,143,222* | *200* | *4,738,619* | *42,185,500* |
| வட மத்தி | *22,904,179* | *273,079* | *635,906* | *1,460,000* | *814,113* | *457,026* | *252* | *3,640,376* | *26,544,555* |
| ஊவா | *24,916,875* | *288,936* | *798,702* | *1,021,100* | *914,223* | *727,999* | *600* | *3,751,560* | *28,668,435* |
| சப்ரகமுவ | *32,942,983* | *301,219* | *687,192* | *1,630,000* | *991,098* | *743,821* | *10,020* | *4,363,350* | *37,306,333* |
| கிழக்கு | *30,889,661* | *241,153* | *757,756* | *1,310,000* | *1,007,262* | *649,715* | *9,485* | *3,975,371* | *34,865,032* |
| **மொத்தம்** | ***320,253,014*** | ***3,050,801*** | ***7,791,645*** | ***13,331,100*** | ***10,414,527*** | ***8,102,670*** | ***286,755*** | ***42,977,498*** | ***363,230,512*** |

**இணைப்பு – 05**

***முற்பணக்கணக்கு B க்கான கோரிக்கைகள் -2021***

***(ரூ. 000)***

| மாகாணம் | முற்பணக்கணக்கு B மீதான கோரிக்கை |
|---|---|
| *(1)* | *(2)* |
| மேற்கு | *3,654,450* |
| மத்திய | *1,500,000* |
| தெற்கு | *4,719,000* |
| வடக்கு | *650,000* |
| வட மேற்கு | *2,837,000* |
| வட மத்தி | *1,191,934* |
| ஊவா | *700,000* |
| சப்ரகமுவ | *2,334,350* |
| கிழக்கு | *750,000* |
| மொத்தம் | *18,336,734* |

**இணைப்பு 06**

***மாகாண பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்கு மற்றும் சேகரிப்பு( 2019 -2022)***

ரூபா.மில்

| மாகாணங்கள் | 2019 | | 2020 | | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | சேகரிப்பு | இலக்கு | சேகரிப்பு | இலக்கு | இலக்கு |
| மேற்கு | 26,385 | 21,987 | 26,750 | 19,521 | 25,400 | 23,175 |
| மத்திய | 4,078 | 3,677 | 4,195 | 3,304 | 4,650 | 3,940 |
| தெற்கு | 4,366 | 4,580 | 4,550 | 4,359 | 4,846 | 4,037 |
| வடக்கு | 1,580 | 1,990 | 1,860 | 2,074 | 2,135 | 2,345 |
| வட மேற்கு | 4,707 | 4,678 | 4,970 | 4,438 | 5,110 | 5,252 |
| வட மத்தி | 1,541 | 1,691 | 1,826 | 1,904 | 1,951 | 1,812 |
| ஊவா | 1,495 | 1,389 | 1,605 | 1,416 | 1,640 | 1,629 |
| சபரகமுவ | 2,195 | 2,720 | 2,275 | 2,350 | 2,900 | 2,477 |
| கிழக்கு | 1,640 | 1,523 | 1,725 | 1,637 | 1,780 | 1,752 |
| **மொத்தம்** | 47,987 | 44,235 | 49,756 | 41,005 | 50,412 | 46,419 |

*குறிப்பு : மாகாண பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்கு மற்றும் சேகரிப்பு முத்திரை வரி மற்றும் தண்டப்பணத்தை உள்ளடக்கியது*

***மாகாண சபைகளினால் கொடுப்பனவு செய்யப்படும் நோயாளிகளுக்கான சமூக உதவி தொகை -2021***

| மாகாணங்கள் | புற்று நோய் | நாட்பட்ட சிறுநீரக நோய் | | தொழு நோய் | தலசீமியா | காசநோய் *** | விசேட நோய் சிகிச்சை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட அரசின் தொகை * | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட மாகாண சபைகளின் தொகை ** | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை 6-7 மாதங்களுக்கு | ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| மேற்கு | 1000 | 5000 | | 1000 | 1000 | 3000 | |
| மத்திய | 1000 | 5000 | 700 | 1000 | 1000 | 1000 | |
| தெற்கு | 450-700 | 5000 | | 450-700 | 700 | 450-700 | |
| வடக்கு | 5000 | 5000 | 3000 | 5000 | 5000 | 5000 | 1500-3000 |
| வடமேற்கு | 1500 | 5000 | 2000 | 1000 | 1500 | 5000 | 500 |
| வட மத்தி | 1500 | 5000 | | 3000 | 3000 | 3000 | 3000 |
| ஊவா | 3000 | 5000 | 3000 | 3000 | 3000 | 450-750 | 3000 |
| சப்ரகமுவ | 250-500 | 5000 | | 250-500 | 250-500 | 5000 | |
| கிழக்கு | 250-500 | 5000 | 500 | 250-500 | 500 | 5000 | |

** மூன்றாம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு அரசினால் நேரடியாக கொடுப்பனவு செய்யப்படும்*

*** நாங்கம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு மாகாண சபைகளினால் கொடுப்பனவு செய்யப்படுபவர்களும் அரசினால் நேரடியாக கொடுப்பனவு செய்யப்படாதவர்களுமாவர் .*

**** சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களின் 22.05.2021 திகதியிடப்பட்ட கடிதம் இல.. NPTCCD/SS/2018 . ஆனது காச நோயாளர் ஒருவருக்கு மாதம் ரூபா 5000 வழங்கும் படி மாகாண சபைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.இவ்வழி காட்டல்கள் இன்னும் சில மாகாணங்களால் பின்பற்றப்படவில்லை.*